விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி

Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 068 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 13 வெள்ளிக்கிழமை (25.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

# போர் ஆரம்பம்

## உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல்






- இராணுவ நடவடிக்கைக்கு உத்தரவிட்டார் ரஷ்ய அதிபர் புடின்.
- பொதுமக்கள் பலர் உயிரிழப்பு.
- உக்ரைனின் விமானப்படை, கடற்படை கட்டமைப்பை செயலிழக்கச் செய்துவிட்டதாக ரஷ்யா அறிவிப்பு.
- ரஷ்யாவிடம் சரண் அடையமாட்டோம் என உக்ரைன் அதிபர் அறிவிப்பு.
- 3ஆவது உலகப் போர் மூளும் அபாயம்.
- உக்ரைனுக்கு துருப்புகள் அனுப்பும் திட்டம் இல்லை என நேட்டோ அறிவிப்பு.
- ரஷ்யா மீது ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத் தடை

(15ஆம் பக்கம் பார்க்க)





## யார் குறுக்கே வந்தாலும் வரலாறு காணாத அழிவை சந்திப்பீர்கள்

### உலக நாடுகளுக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் எச்சரிக்கை



(மொஸ்கோ)

ரஷ்யாவின் பாதையில் குறுக்கிடுபவர்கள் வரலாறு காணாத அளவு மோசமான பாதிப்புகளை சந்திக்க நேரிடும் என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் உலக நாடுகளை எச்சரித்துள்ளார். (02ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் இன்றும் பெரும்பாலான பகுதிகளில் 5 மணித்தியாலங்களுக்கு அதிகமாக மின்வெட்டு

(கொழும்பு)

நாட்டில் இன்றும் பெரும்பாலான. பகுதிகளில் 5 மணித்தியாலங்களுக்கும் அதிக காலம் மின் துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை மின்சார சபை முன் வைத்த கோரிக்கைக்கு, 15

## புகையிரதம் மோதியதில் இளம் யுவதி உயிரிழப்பு

### கொக்குவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் புகையிரத நிலையத்திற்கு அருகில் புகையிரதத்துடன் மோதுண்டு இளம் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார். 15

## மார்ச் 3ஆம் திகதி ஐ.நாவில் இலங்கை தொடர்பான அமர்வு

(ஜெனிவா)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வு இம்மாதம் 28ஆம் திகதி முதல் ஏப்ரல் முதலாம் திகதி வரை ஜெனிவாவில் 15

## 'தமிழர் நிலங்களை பறிக்காதே' தமிழ் எம்.பிகள் சபையில் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

"பறிக்காதே பறிக்காதே காணிகளை பறிக்காதே" என சபைக்குள் கோஷம் எழுப்பியும் பதாகைகளை ஏந்தியவாறும் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் நிலங்கள் பறிக்கப்படுவதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் சபைக்குள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற 15

## பயங்கரவாத சட்டத்தை நீக்குக

### மாநகர சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் புரையோடிப்போன இனப் 16

## வடமராட்சியில் விபத்து சம்பவ இடத்திலேயே இளைஞன் பலி




(கரணவாய்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று கனரக வாகனத்துடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள் 15

## மிகக் குறுகிய காலத்துக்கு தேவையான எரிபொருளே கைவசம் உள்ளது

### சபையில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில

(கொழும்பு)

அடுத்த மூன்றுமாதங்களுக்கு தேவையான எரிபொருளை இறக்குமதி செய்ய 1285.50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காணி அபகரிப்பு தொடர்பில் ஜனாதிபதிக்கு அறிவித்தும் பயனில்லை

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

காணி அபகரிப்பு குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷக்கு பல தடவைகள் அறிவித்த போதிலும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் நேற்று போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இந்த போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காணி அபகரிப்பு குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஒரு வருடத்திற்கு முன்பாகவே இரண்டு கடிதங்களை அனுப்பியதாகவும் எனினும் இதுவரையில் இந்த விடயம் குறித்து ஜனாதிபதியிடமிருந்து எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சியாக இந்த விடயம் குறித்து எழுத்து மூலமாக அறிவித்தும் சமல் ராஜபக்ஷவுடன் சந்திப்புக்களை மேற்கொண்டும் தொடர்ச்சியாக காணி அபகரிப்பு முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குற்றம்சாட்டினார். இதன் காரணமாகவே, இவ்வாறு இன்று (நேற்று) போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்ததாக அவர் தெரிவித்தார். (ம)

## வரலாறு...

உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த பின் உரையாற்றிய புடின் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

உக்ரைனின் பல நகரங்களில் ரஷ்ய படைகள் குண்டு மழை பொழிவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு உக்ரைனின் முக்கிய நகரங்கள் மீது ரஷ்ய ஏவுகணைகள் சரமாரியாக பாய்ந்து தாக்குவதால் உச்சக்கட்ட பதற்ற நிலை உருவாகியுள்ளது.

உக்ரைன் நாட்டில் தாக்குதல் நடத்தும் ரஷ்யாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். ஆனால், ரஷ்யாவின் பாதுகாப்பில் எவ்வித சமரசமும் செய்து கொள்ள முடியாது என ஜனாதிபதி புடின் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் பாதையில் குறுக்கிடுபவர்கள் வரலாறு காணாத அளவு மோசமான பாதிப்புகளை சந்திக்க நேரிடும் என்றும் புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், 'உக்ரைனை ஆக்கிரமிப்பது ரஷ்யாவின் நோக்கமல்ல. அங்கு அமைதியை ஏற்படுத்துவதே எங்கள் நோக்கம். நேட்டோவில் உக்ரைனை சேர்க்கக் கூடாது என்ற எங்கள் கோரிக்கையை அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும் ஏற்கவில்லை' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் விவகாரத்தில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து விவாதிக்க ஜி 7 நாடுகளின் அவசர கூட்டத்திற்கு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது. அத்துடன், நேட்டோ கூட்டணி நாடுகளின் தலைவர்களுடனும் அமெரிக்க ஜனாதிபதி பைடன் அவசர ஆலோசனை நடத்துகிறார். (ம)




## விசேட பொதுக் கூட்டமும் பொதுக் கூட்டமும்

### விசேட பொதுக் கூட்டம்

கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பிரமாண திருத்த விடயமாக விசேட பொதுக் கூட்டம் 5.03.2022 மாலை 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெற உள்ளது. இப்பிரமாண திருத்தங்கள் பத்திரிகை விளம்பரம் ஊடாக 20.08.2021 அங்கத்தவர்களிடம் இருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதனை விசேட பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படஉள்ளது.

### பொதுக் கூட்டம்

26.03.2022 மாலை 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் பொதுக் கூட்டம் நிர்வாக சபைத் தெரிவு இடம்பெறும். மேற்குறிப்பிட்ட பொதுக் கூட்டம் மற்றும் விசேட பொதுக் கூட்டத்தில் கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலயத்தின் அங்கத்தவர்கள் மட்டும் பங்கு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பங்குபற்றும் அங்கத்தவர்கள் அங்கத்துவ அட்டையை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 5 - 6 மணிவரை ஆலய மண்டபத்தில் நிர்வாக சபையிடம் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
கிருபாகர சிவசுப்பிரமணிய
சுவாமி கோவில், கொக்குவில்.

(10364)


# மதம் மாற்ற முயற்சி பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

மதம் மாற்ற முயற்சி செய்தவர்களுக்கு எதிராக உருத்திரசேனை அமைப்பினரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உருத்திரசேனை அமைப்பின் உறுப்பினர் ஒருவரின் தாய் கடந்த வருடம் காலஞ்சென்றிருந்த நிலையில் தாயாரின் மரண அறிவித்தல் செய்தியில் குறித்த உறுப்பினரின் பெயர் மற்றும் முகவரியை பெற்றுக் கொண்ட குறிப்பிட்ட ஒரு சமயத்தினர் அந்த முகவரிக்கு குறிப்பிட்ட இளைஞரின் பெயருக்கு கடந்த ஒரு வருடமாக தொடர்ச்சியாக அவரை மதம் மாற்றும் எண்ணத்தில் வேறு வேறு பெண்களின் பெயர்களில் தொலைபேசி இலக்கங்களையும் சேர்த்து தங்களை தொடர்புகொள்ளுமாறு கடிதங்கள் அனுப்பி வந்துள்ளனர்.

கடந்த வருடம் குறித்த இளைஞர் மற்றும் உருத்திரசேனை அமைப்பினர் கடிதம் அனுப்பிய ஒருவரின் வீட்டிற்கு நேரடியாகவே சென்று இனி கடிதம் அனுப்ப வேண்டாம் என்று கூறியிருந்த நிலையில் சில மாதங்கள் கடிதங்கள் எதுவும் குறித்த இளைஞருக்கு வரவில்லை.

பின்பு இந்த வருடம் மீண்டும் தொடர்ச்சியாக கடிதங்கள் வந்ததால் குறித்த இளைஞர் மற்றும் உருத்திரசேனை அமைப்பினர் நேற்று யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் காரியாலயத்திற்கு சென்று கடைசியாக கிடைக்கப்பெற்ற 2 கடிதங்களை அனுப்பிய நபர்கள் மேல் கடிதம் மூலம் மதம்மாற்ற முயற்சி என்று முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளனர். (ம)

## மிகக்கு...

நேற்று எரிபொருள் தட்டுப்பாடு நிலைமைகள் குறித்து எதிர்க்கட்சி தலைவர் எழுப்பிய கேள்விக்கு பதில் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன் இப்போதுள்ள நிலையில் 92 ரக பெட்ரோல் பத்து நாட்களுக்கும், 95 ரக பெட்ரோல் நாற்பது நாட்களுக்கும் டீசல் எட்டு நாட்களுக்கும் சூப்பர் டீசல் எட்டு நாட்களுக்குமே கைவசம் உள்ளது. எனினும் எதிர்காலத்தில் எரிபொருள் கிடைக்கும். மேலும் ஆறு நாட்களுக்கு தேவையான டீசல் இப்போதும் இறக்குமதி செய்யப்படுகின்றது.

அடுத்த மூன்று மாதங்களுக்கு தேவையான எரிபொருளை இறக்குமதி செய்ய 1,285.50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்றது.

எனினும் அடுத்த ஆறுமாத காலத்திற்கான தேவை குறித்து நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். இதில் 500 மில்லியன் டொலர்களை இந்திய நிதி உதவியில் இருந்து பெற்றுக்கொள்ளவுள்ளோம். ஏனைய நிதியை பெற்றுக்கொள்ள முயற்சித்துக் கொண்டுள்ளோம். அதற்காக பல தரப்புகளுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றோம் என்றும் அவர் கூறினார். (ம)


## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை மகாதேவா



யாழ்.இராசாவின்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் தலையாழியில் வசித்தவருமான ஐயாத்துரை மகாதேவா அவர்கள் கடந்த 21.02.2022 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் மண்டைதீவு, 6ஆம் வட்டாரம் காலஞ்சென்ற செல்லையா - கமலாம்பிகை தம்பதிகளின் மருமகனும் சுந்தரநாயகியின் அன்புக் கணவரும் மகாலட்சுமி, சகாதேவா, வாமதேவா, விஜயலட்சுமி, சிவதேவா, ஞானதேவா ஆகியோரின் சகோதரனும் மங்களநாயகி, நாகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22.02.2022 செவ்வாய்க்கிழமை கோண்டாவில் கலைவாணி வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் கோண்டாவில் டிப்போ சந்தியடியில் உள்ள இந்து மயானத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாகரத்தினம்
(மைத்துனர்)
077 444 8760

தகவல்: சுந்தரநாயகி (மனைவி)
கலைவாணி வீதி, கோண்டாவில்.
077 899 6670

(10363)



## சேவை

பருத்தித்துறையில் தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புகளும் சமாதான நீதவானின் சேவைகளும் உண்டு.

077 853 5693
021 226 4781

(C-3844)



## ARPICO Insurance PLC

No.86, Navalar Road, Jaffna.

### O/L, A/L முடித்தவரா நீங்கள்?

வாழ்க்கையில் அடுத்த கட்டத்தை தேடுபவராயின்...!

இலங்கையில் 90 வருட காலமாக முதன்மை நிறுவனமாக இயங்கிவரும் ARPICO (Richard Pieris & Company) இன் இந்த ஆண்டுக்கான முழுநேர மற்றும் பகுதி நேர வேலைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

எதிர்பார்க்கப்படும் அடிப்படைத் தகைமைகள்:
- 18 வயதினை பூர்த்தி அடைந்திருத்தல்.
- க.பொ.த சாதாரணம் அல்லது A/L பரீட்சையில் தோற்றியிருத்தல்.

பயிற்சிக் காலத்தில்
- IRCSL உரிமம் வழங்கப்படும்.
- 10,000 - 75,000 வரையான அடிப்படைச் (Basic) சம்பளம்
- Incentive + Commission + Bonus
- EPF, ETF கொடுப்பனவுகள் உண்டு.
- விரைவான பதவி உயர்வு
- இலவச Digital Marketing பயிற்சி.
- வெளிநாட்டு சுற்றுலாப் பயணம்

மேலதிக விபரங்களுக்கு:
A.Joseph Vinson (ASM) | T.P: 077 192 0206

(10344)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கில் நில அபகரிப்பு எதிர்த்து தமிழ் எம்.பிக்கள் போராட்டம்

(கொழும்பு)

**வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் நில அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் போராட்டம் நடத்தினர்.**






வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் நில அபகரிப்பை தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தியும், மகாவலி எல் வலயம் என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்பை தடுத்து நிறுத்த வலியுறுத்தியும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

இப்போராட்டத்தில், தமிழ் மக்கள் கூட்டணியின் சி.வி. விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம், வினோ நோதராதலிங்கம், சிவஞானம் சிறிதரன், எம்.ஏ. சுமந்திரன், த.கலையரசன், சார்ள்ஸ் நிர்மலநாதன், இரா. சாணக்கியன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அரசாங்கத்தை தர்மசங்கடத்தில் ஆழ்த்தவே தமிழ் எம்.பிக்கள் போராட்டம்

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை கருத்திற்கொண்டு அரசாங்கத்தை தர்மசங்கடத்தில் ஆழ்த்தும் சதியே வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னெடுத்த போராட்டமென ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நிலையில், ஜனாதிபதி ஊடகப் பிரிவு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இராசமாணிக்கம் சாணக்கியன், சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் பலர் ஜனாதிபதியை சந்திக்குமாறு கோரி ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், ஜனாதிபதியை சந்திப்பது குறித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னதாக அறிவிக்கவில்லை என அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே, ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளை கருத்திற் கொண்டு அரசாங்கத்தை தர்ம சங்கடத்தில் ஆழ்த்தும் சதியாகவே இந்த சம்பவத்தை பார்க்க முடியும் என அந்தப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (நி)

## மின் துண்டிப்பு காரணமாக கற்றல் செயற்பாடுகள் பாதிப்பு

### இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு


(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தற்போது அமுல்படுத்தப்பட்டு வரும் மின் துண்டிப்பு காரணமாக இணையவழி கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

இணையவழி கற்பித்தலுக்காக பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப உபகரணங்களை செயற்படுத்துவதற்கு மின்சாரம் தேவைப்படுவதனால் இந்த பிரச்சினை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

மேலும், ஒவ்வொரு பகுதியிலும் வெவ்வேறு நேரங்களில் மின்துண்டிப்பு அமுல்படுத்தப்பட்டுள்ளமையினால், தொலைதூர பகுதிகளிலுள்ள ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஒரே நேரத்தில் இணையவழி கற்பித்தலில் ஈடுபடுவதற்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களும் மின்வெட்டினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (நி)



**உலக சாரணர் தின விழா மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.**

## அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு மூடப்படும் நிலையில் பேக்கரித்தொழில்

(கொழும்பு)

பல்வேறு பிரச்சினைகள் காரணமாக அனைத்து பேக்கரி உரிமையாளர்களும் அநாதரவான நிலையில் உள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பேக்கரித் தொழிலை மேலும் கொண்டு நடத்த முடியாது எனவும் நூற்றுக்கணக்கான சிறிய பேக்கரிகள் முற்றாக மூடப்பட்டு அவற்றின் உபகரணங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

கோதுமை மாவின் விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு, பாம் ஓயில், தேங்காய் எண்ணெய் மற்றும் மாஜரின் விலைகள் முன்பை விட 100 வீதம் அதிகரித்துள்ளதை பேக்கரி உரிமையாளர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கி பேக்கரித் தொழிலை புத்துயிர் பெற தலையிடுமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கான் அணிக்கெதிரான போட்டியில் பங்களாதேஷ் அணி வெற்றி



ஆப்கானிஸ்தான் அணிக் கெதிரான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் கிரிக்கெட் அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில், 1-0 என்ற கணக்கில் பங்களா தேஷ் அணி முன்னிலை பெற்றுள்ளது.

சட்டோ கிராம் மைதானத் தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி, முதலில் துடுப் பெடுத்தாடத்தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப் பெடுத்தாடிய ஆப்கானிஸ் தான் அணி, நிர்ணயிக்கப் பட்ட 49.1ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளை யும் இழந்து 215 ஓட் டங்களைப் பெற்றுக்கொண் டது.

இதில் அணியின் அதிக பட்ச ஓட்டங்களாக, நஜிபுல்லா 67 ஓட்டங்களையும் ரஹமத் 34 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், முஷ்டபிசுர் 3 விக்கெட்டு களையும் டஸ்கின் அஹமட், சகிப் அல்ஹசன் மற்றும் சொரிபுல் இஸ்லாம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் மொஹமதுல்லா 1 விக்கெட்டி னையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 216 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங் கிய பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, 48.5 ஓவர்கள் நிறை வில் 6 விக்கெட்டுகள் இழப் புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால், பங்களாதேஷ் கிரிக்கெட் அணி 4 விக் கெட்டுகளால் வெற்றி பெற் றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அபீப் ஹொசைன் ஆட்டமிழக்காது 93 ஓட்டங்களையும் மெயிடி ஹசன் ஆட்டமிழக்காது 81 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

ஆப்கானிஸ்தான் அணி யின் பந்துவீச்சில், பசல்ஹக் பாரூக்கி 4 விக்கெட்டுகளை யும் முஜிப் உர் ரஹ்மான் மற்றும் ராஷித்கான் ஆகி யோர் தலா 1 விக்கெட்டினை யும் வீழ்த்தினர். இப்போட் டியின் ஆட்ட நாயகனாக ஆட்ட மிழக்காது 81 ஓட்டங்களையும் சிறப்பான பந்து வீச்சையும் வெளிப்படுத்திய மேயிடி ஹசன் தெரிவு செய்யப்பட்டார். (4-6)

# பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு மயங்க் அகர்வால் கப்டன்?



2022 ஐ.பி.எல்.தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு மயங்க் அகர்வால் கப்டனாக நியமிக்கப்பட உள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது.

ஐ.பி.எல்.கிரிக்கெட் போட்டி தொடரில் பஞ்சாப் அணிக்கு கடந்த சீசன்களில் லோகேஷ் ராகுல் கப்டனாக செயற் பட்டார்.

இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். போட்டியில் புதிய வரவாக வந்துள்ள லக்னோ அணிக்கு லோகேஷ் ராகுல் சென்று விட்டார்.

அவர் அந்த் அணிக்கு கப்டனாக நியமிக்கப்பட்டுள் ளார்.

இந்த நிலையில் பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு யாரை நியமிப்பது தொடர்பாக அணி நிர்வாகம் ஆலோசித்து வந்தது.

இதில் அந்த அணியின் தொடக்க வீரரான மயங்க் அகர்வால் கப்டனாக நியமி க்கப்பட உள்ளார் என்ற தகவல் வெளியாகி உள்ளது.

பஞ்சாப் அணி நிர்வாகம் மயங்க் அகர்வாலை தக்க வைத்துக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (4-6)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2522

**கபிலன்**

என்னதான் வித விதமா வெஜிடெபிள்ஸ் சாப்பிட்டாலும்



நாலு துண்டு கறி சாப்பிடாம ஞாயிறு, ஞாயிறு மாதிரி இல்ல...!!!

**சங்கவி**

தண்ட சோறு தண்ட சோறுனு சொல்றாங்களே..



அதுல எந்த குழம்பு ஊத்தி சாப்பிட்டா நல்லா இருக்கு.

**நிதர்சன்**

ஏண்டி என்ன புள்ளைய பெத்தாய் அங்க பாரு நடு ரோட்ல போறத..!!



அவன் சிங்கக் குட்டியா அப்படித்தான் போவான்..!!!!

**டிசானி**

உங்க கிட்னி பெயில் ஆயிடுச்சு.....



நான் என்கிட்னிய படிக்க வைக்கவே இல்லையே டாக்டர்! அது எப்படி பெயில் ஆகும்????

**துவாரகன்**

காதலுக்கு கண் இல்லை



ஆனா முதலைக்கு நல்லா தெரியும்டா...



**பிருந்தா**



சத்தியமா நான் சொல்லுறேன் டி உன் பார்வ ஆள தூக்குதடி.....



அடேய்ய்!! அவளே கண்ணு தெரியாம கண்ணாடி போட்டு இருக்கா இதுல ஆள தூக்கு தா....

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

### சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),சுன்னாகம் 31.07.2021 இல் உள்ளவாறான கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தல்

சங்கத்தின் 2020/2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் கிராமிய வங்கிகளில் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தங்களது மீதியினை உறுதிப்படுத்திக் கொள்ள இக்காலத்துக்குரிய கணக்குப் புத்தகங்களுடன் கீழ் குறிப்பிட்ட நாட்களில் அக் கிராமிய வங்கிக்கு சமூகம் தந்து தங்கள் மீதியினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் கணக்குகளை உறுதிப்படுத்தாத வாடிக்கையாளர்களின் மீதிகள் சங்கப் பேரேடுகளின்படி சரியானதென உறுதிப்படுத்தப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

| கிராமிய வங்கியின் பெயர் | பார்வையிடும் திகதி | பார்வையிடும் நேரம் |
|---|---|---|
| இணுவில் கிராமிய வங்கி | 08.03.2022 –செவ்வாய் | காலை 10.00 – பி.ப 03.00 |
| ஏழாலை கிராமிய வங்கி | 07.03.2022 –திங்கள் | காலை 10.00 – பி.ப 03.00 |
| குப்பிளான் கிராமிய வங்கி | 08.03.2022 –செவ்வாய் | காலை 10.00 – பி.ப 03.00 |
| சுன்னாகம் கிராமிய வங்கி | 07.03.2022 –திங்கள் | காலை 10.00 – பி.ப 03.00 |

**பொது முகாமையாளர், சுன்னாகம் ப.நோ.கூ. சங்கம்**
**காங்கேசன்துறை வீதி,சுன்னாகம்**

(சி-3839)

## பதவி வெற்றிடம்

01. பதவி- உற்பத்தி மேலாளர்
பதவி குறியீடு :- 107-(1)/05
சம்பள அளவுத்திட்டம் :- 20480-310 X 10-345 X 10-27030
வெற்றிட எண்ணிக்கை :- 01

**அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தகைமைகள் :-**

அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சித்த வைத்தியருக்கான பட்டம் அல்லது லங்கா சித்த, ஆயுள்வேத மருத்துவ கல்லூரியில் சித்த வைத்தியர் பட்டம் அத்துடன் அதே சேவையை ஒத்த நிறுவனத்தில் ஆகக் குறைந்தது 1 வருட கால அனுபவம்.

02. பதவி :- தொழிலாளி
பதவி குறியீடு :- 318/17
சம்பள அளவுத்திட்டம் :- 14725-115X10-130X10-17175
வெற்றிட எண்ணிக்கை :-02

**அங்கீகரிக்கப்பட்ட கல்வித்தகைமைகள்:-**

(அ) ஐந்தாம் தர கல்விச் சான்றுதலுடன் சிறந்த தேக ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

- வயது எல்லை 18–45 வருடங்கள் (31:97) சுற்றறிக்கைக்கமைய சங்கப் பணியாளர்களுக்கு வயது எல்லை கவனிக்கப்படமாட்டாது)
- சங்கப் பணியாளர்களுக்கும் சங்க எல்லைப் பரப்புக்கு உட்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- சங்கங்களில் கடமையாற்றுவோர் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் சங்க அலுவலகத்தில் காரியாலய நேரத்தில் ரூபா 100.00 செலுத்தி பெற்றுக் கொள்ளவும்.
- விண்ணப்ப முடிவு திகதி 15.03.2022
- விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும்.

(சி-3837)

**தலைவர், யாழ். மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு.**

## 'ரோச் லைற்றுகளுடன் பாராளுமன்றம் வந்த எதிர்க்கட்சியினர்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பாராளுமன்றத்திற்குள் மின் பந்தங்களை (டோச்) எடுத்து வந்ததன் காரணமாக பாராளுமன்ற அவையில் மீண்டும் அமளி ஏற்பட்டது.

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் மின் துண்டிப்புக்கு எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் எதிர்க்கட்சியினர் இவ்வாறு ரோச் லைற்களை எடுத்து வந்துள்ளனர். (நி)

## பளை, பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
### பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி சங்கத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01.பதவி, குறியீட்டு இல:- விற்பனை உதவியாளர் 308/17**
சம்பள அளவுத்திட்டம் :- 14725-115 X 10-130 X 10-17175.00

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ. கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தரச் சான்றிதழ் அல்லது.
ஆ. 08 ம் வகுப்புச் சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**விண்ணப்ப முடிவுத்திகதி :- 07.03.2022**

**நிபந்தனைகள்**

1. பதவிக்கேற்ப பிணைப்பணம் அறவிடப்படும்
2. வயதெல்லை 18 தொடக்கம் 45 வரை (கூட்டுறவுச் சங்கப்பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.)
3. அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படியும் வழங்கப்படும்.
4. கூட்டுறவுச் சங்கங்களில் தற்பொழுது கடமையாற்றுபவர்கள் சங்கத்தின் ஊடாக சிபார்சு செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.
5. சங்க எல்லைப் பரப்புக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
6. விண்ணப்பங்கள் முழுப் பெயர், முகவரி, தே. அ.அ. இல, பிறந்த திகதி, தகைமைகள், அனுபவம் என்பவை உள்ளடங்கலாக சுயமாக தாயாரிக்கப்பட்டு கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் , அனுபவச் சான்றிதழ் பிரதிகளை இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
7. விண்ணப்பங்களை ஏற்கவோ, நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு
8. விண்ணப்பங்கள் தலைவர் பளை , பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கண்டி வீதி, பளை எனும் முகவரிக்கு எதிர்வரும் 07.03. 2022 ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
9. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

(சி-3840)

க.இராசதுரை,
(2022.02.25) தலைவர், பளை.ப.தெ.வ.அ.கூ.சங்கம்

## இராசிபலன்

25.02.2022
மாசி 13, வெள்ளிக்கிழமை
நவமி முற்பகல் 11.33 மணிவரை
கேட்டை முற்பகல் 10.51 மணிவரை
சுபநேரம் - 6.29-7.59 மணிவரை
இராகுகாலம் - 10.59-12.29 மணிவரை
சந்திராஷ்டமம்- கார்த்திகை

வளவன்

**மேஷம்** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், பெரிய மனிதர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

**ரிஷபம்** குடும்பத்தில் எதிர்பாராத வகையில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும் , உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், பிரயாணபயமுண்டு.

**மிதுனம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்,நண்பர்களால் ஒரு சில நன்மைகள் நடைபெறலாம்.

**கடகம்** பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், சுப நிகழ்வுகளில் பங்கு கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம் பெறலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி** விரதம்,வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் ,கடன் சுமை குறையும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**துலாம்** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி கூடும் நாள்,வழி பாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும்.

**தனுசு** சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, எதிர்பாராத காரிய மொன்று இன்று நடைபெறும் வாய்ப்புண்டு, போசனசுகமுண்டு.

**மகரம்** குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது,தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும் காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**கும்பம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்,எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்,வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும்,செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள்,மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றிய பிறகு பெற்ற அறிவுரை தந்திடும் வேதனை

# அதிகரித்தது பால் விலை!



(யாழ்ப்பாணம்)

**பால் உற்பத்தியாளர்களின் உற்பத்திச் செலவை ஈடுசெய்யும் முகமாக பால் விலையை அதிகரிக்கவுள்ளதாக யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அறிவித்துள்ளது.**

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இதுவரை காலமும் பால் விலை 120 ரூபாயாக விற்பனை செய்யப்பட்டு வந்தது.

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் பாலின் விலை 10 ரூபாயால் அதிகரிக்கப்பட்டு 130 ரூபாவாக நிர்ணயம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளது.

பால் உற்பத்தியாளர்களின் உற்பத்திச் செலவை ஈடுசெய்யும் முகமாக பாலின் கொள்விலையை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் பாலின் விற்பனை விலை அதிகரிப்பது தவிர்க்க முடியாதுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# நிவாரண கலாசாரத்தில் இருந்து பொதுமக்களை விடுவிக்க வேண்டும்

## சமுர்த்தி வங்கி முகாமையாளர் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

வாழ்வாதாரத் திட்டங்கள் ஊடாக மக்களின் வாழ்க்கையை வளப்படுத்தி நிவாரண கலாசாரத்தில் இருந்து விடுவிக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம் என கொடிகாமம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ம.விஜயேந்தி தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொடிகாமத்தில் இடம்பெற்ற சமுர்த்திக் கொடுப்பனவுகளை அதிகரித்து வழங்கும் நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் இலவசக் கல்வி உள்ள போதிலும் அரசு ஊக்கத்தொகையை வழங்குகின்றது. இந்த நடைமுறை வேறெந்த நாட்டிலும் கிடையாது. இந்த உதவித் திட்டத்தை சரியாகப் பயன்படுத்தி கல்வியிலும், வாழ்விலும் முன்னேற வேண்டும்.

அதனைவிட சமுர்த்தி ஊடாக வலுவிழந்தோருக்கான சௌபாக்கியா வீட்டுத்திட்டம் பிரதேச செயலர் பிரிவு ஒன்றுக்கு 5 வீடுகள் என்ற அடிப்படையில் வழங்கப்படுகிறது. 2021 ஆம் ஆண்டு பல மில்லியன் நிதி அரசாங்கத்தால் வாழ்வாதாரத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

வழங்கப்படுகின்ற வாழ்வாதாரம் ஊடாக வருமானம் ஈட்டி நிவாரண கலாசாரத்தில் இருந்து விடுபட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம்.

அதனை கருத்திற்கொண்டு பயனாளிகள் செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (4-6-30)


# எல்லை தாண்டிய மீன்பிடி 22 இந்திய மீனவர்கள் கைது



(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 22 தமிழ்நாட்டு மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் - காரைநகரை அண்டிய கடற்பரப்பில் மீன்பிடித்து கொண்டிருந்த காரைக்கால் மற்றும் நாகை மாவட்டத்தைச் சேர்ந்த 22 மீனவர்களையும் இரண்டு விசைப்படகுகளையும் கடற்படையினர் கைது செய்து யாழ்ப்பாணம் - மயிலட்டி மீன்பிடி துறைமுகத்திற்கு அழைத்துச் சென்றனர். தொடர்ந்து மீனவர்களுக்கு கொரோனா மற்றும் மலேரியா தொற்று தொடர்பில் சுகாதாரத் துறையினரால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, மீன்பிடி நீரியல்வள திணைக்கள அதிகாரிகளிடம் சட்ட நடவடிக்கைக்காக கையளிக்கப்பட்டு. ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-33)



ஜனாதிபதி சாரணர் விருது வழங்கும் நிகழ்வு மாவட்ட சாரண ஆணையாளர் தலைமையில் நேற்று முன்தினம் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி செயலகத்திலிருந்து இணையவழி ஊடாக சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 31 பேர் ஜனாதிபதி சாரணர் விருதினைப் பெற்றதோடு, இவர்களுக்கான ஜனாதிபதி சாரணர் விருதினை மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் வழங்கி வைத்தார்.

(படம்:-சிவசாந்தன்)

# சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டை பகுதியினை தூய்மையாக்கும் பணிகள் கடந்த 19 ஆம் திகதி இளையோரினால் ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த பணியின் தொடர்ச்சியாக நாளை 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணி முதல் 10.00 மணி வரை இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மாசற்ற நகரம் எனும் செயற்றிட்ட மூடாக முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-6)

# சிலம்பம் விளையாட்டில் உலக சாதனை முயற்சி

(யாழ்ப்பாணம்)

GoshinIsshinryu Karate Association -Sri Lanka ஊடாக சிவலீமன் சிலம்பக் கழக மாணவர்களினால் நாளை மறுதினம் 27 ஆம் திகதி சிலம்பத்தில் உலக சாதனை முயற்சியொன்றுமுன்னெடுக்கப்படவுள்ளது.

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ள குறித்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டம், முல்லைத்தீவு மற்றும் புதுக்குடியிருப்பை சேர்ந்த 16 சிலம்பம் மாணவர்களினால் குழுச் சாதனை முயற்சியொன்றும், 10 வயது மற்றும் 8 வயதைச் சேர்ந்த இரண்டு தனி மாணவர்களினால் Push-Up இல் சாதனை முயற்சியும் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த சாதனை முயற்சியை Global World Record நிறுவனமானது பரீட்சித்து அங்கீகாரம் வழங்கவுள்ளது. தற்போதைய கெரோனா சூழல் காரணமாக குறித்த பரீட்சிப்பானது நிகழ்நிலையில் இடம்பெறவுள்ளது.

குறித்த சாதனை முயற்சியானது பாபுசென்சாயின் (President-GoshinIsshinryu Karate Associatiation -Sri lanka, Northern President- Sri Lanka Silambam Federation) பயிற்சி மற்றும் கண்காணிப்பின் கீழ் இடம்பெறவுள்ளது. (4-6)

# யாழில் மூதாட்டி அடித்துக் கொலை; சந்தேக நபர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவனியூ பகுதியில் வீடொன்றில் வயோதிப பெண்ணொருவர் அடித்துக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குறித்த கொலைச் சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த மரியநாயகம் காணிக்கையம்மா ஜெயசீலி (வயது-72) எனும் பெண்ணே அடித்துக் கொலை செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் கொலை நடந்த வீட்டிற்கு அருகில் இருந்த சி.சி.ரி.வி.காணொளிகள் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

காணொளியில் கொலைச் சந்தேக நபர் துவிச்சக்கர வண்டியில் தப்பி செல்லும் காட்சியின் அடிப்படையில் விசாரணைகளைத் துரிதப்படுத்தி இருந்த பொலிஸார் யாழ்ப்பாணம் முலவை எனும் பகுதியில் வைத்து கொலைச் சந்தேக நபரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-18-33-104)



இந்தியத்துணை தூதரகத்தின் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி நிவான்ட் விக்ரம் சிங் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்தச் சந்திப்பின் போது கலாநிதி நிவான்ட் விக்ரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பீடா திபதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

(படம் - சிவசாந்தன், கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடன் ஒரு பில்லியன் டொலர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் இலங்கை

(கொழும்பு)

இந்தியாவுடன் ஒரு பில்லியன் டொலர் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட நிதி அமைச்சு தயாராகி வருகிறது.

இந்திய அரசின் தலையீட்டுடன் இந்தியன் வங்கியுடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப் படவுள்ளதாக நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல நேற்று வியாழக்கிழமை ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வசதியாக இந்த ஒப்பந்தம் கைச்சாத் திடப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## நாட்டை நோக்கி வரும் மற்றுமொரு எரிபொருள் கப்பல்



(கொழும்பு)

எரிபொருள் தட்டுப்பாடு எதிர்வரும் சில தினங்களில் குறைவடைந்துவிடும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் எரிபொருளின் விலையை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானிக்கவில்லை. 35 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான நிதியை செலவிட்டு, விடுவிக்கப்பட்டுள்ள கப்பலில் 37 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் டீசல் தரையிறக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சில தினங்களில் மேலும் ஒரு கப்பல் எரிபொருளுடன் நாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (நி)


## சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

### சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கான வாக்களிக்க தகுதியுடைய வாக்காளர் பட்டியல் தொடர்பான அறிவித்தல்

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கான 31.12.2020 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்க தகுதியுடைய வாக்களர்களின் பெயர் விபரம் அடங்கிய வாக்காளர் பட்டியல் இயங்குகின்ற கிளைகளிலும், இயங்காத கிளைகளின் பட்டியல் சங்க தலைமை காரியாலயத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்பதனை அறியத்தருகின்றோம்.

**வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடங்களின் விபரம்:-**

| கிளை இலக்கம் | காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடம் | கிளை இலக்கம் | காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடம் |
|---|---|---|---|
| கிளை -01 | -கிளை நிலையம் -01 | கிளை-16 | -சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் |
| கிளை -02 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-17 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -03 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-18 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -04 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-19 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -05 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-20 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -06 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-21 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -07 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-22 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -08 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-23 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -09 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-23A | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -10 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-24 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -11 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-25 | -ஏழாலை கிராமிய வங்கி |
| கிளை -12 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-26 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -13 | -இணுவில் கிராமிய வங்கி | கிளை-28 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -14 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-29 | -சங்க தலைமை காரியாலயம் |
| கிளை -15 | -சங்க தலைமை காரியாலயம் | கிளை-30 | -சங்க தலைமை காரியாலயம் |

இவ் வாக்காளர் பட்டியல் 28.02.2022 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 18.03.2022 ஆம் திகதி வரை மேற் குறிப்பிட்ட இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் என்பதுடன் மேற்படி வாக்காளர் பட்டியல் தொடர்பான திருத்தங்கள், ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் சங்கச் செயலாளருக்கு எழுத்து மூலம் எதிர்வரும் 18.03.2022 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றோம். பின்னர் வரும் ஆட்சேபனைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

செயலாளர்
சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்(வ-து)

25.02.2022 (c-3838)



32 வருடகால ஆசிரிய சேவையாற்றி ஓய்வுபெறும் நாளில்

## மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்




ஆசிரியர் பணியைத் திறம்பட ஆற்றி ஓய்வுபெறும் ஆசிரியை திருமதி.

## மதிவதனி விஜயகுமார்

(பயிற்றப்பட்ட விஞ்ஞான பாட ஆசிரியர், SLTS-I)

அவர்களின் மணிவிழா நாளில் பிறந்தநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஓய்வுக்காலம் சிறப்பாகவும், நலமாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

பாடசாலை -காலம்
யா/ சென் .மேரீஸ் வித்தியாலயம் - ஆசிரியர்-1990-2000
யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் - ஆசிரியர்-2000-2009
யா/ சென் .சாள்ஸ் மகாவித்தியாலயம் - ஆசிரியர்-2009-2017
யா/ சென் .ஜேம்ஸ் மகளிர் பாடசாலை - ஆசிரியர் - 2017 தொடக்கம் இன்றுவரை

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
யா/ சென் .ஜேம்ஸ் மகளிர் பாடசாலை
யாழ்ப்பாணம்.

(c-3841)



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 3<br>கி.பா: சூரி 9 செவ் 8 இல் உயரம் 5'5"<br>தகைமை/தொழில்: A/L Computer Hardware Technician<br>எதிர்பார்ப்பு: படித்த உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/12336 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: சூரி 10 செவ் 6 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Buchel.optome/Aust, Optometrist, Wesfield தனியார்<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர் அவுஸ்திரேலிய பிரஜை விரும்பத்தக்கது. உள்நாடும் ஏற்கப்படும்<br>தொ.இ:G/9090 |
| பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 38¾ சூரி 9 செவ் 12 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பட்டதாரி (பொறியியல்) civil Engineer சைவ போசனம்<br>எதிர்பார்ப்பு: ICT, பட்டதாரி சைவபோசனம் விரும்பத்தக்கது அசைவமும் ஏற்றுக் கொள்ளப்படும்<br>தொ.இ: B/12337 | பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 87 சூரி 12 செவ் 8 இல் உயரம்: 161 cm<br>தகைமை/தொழில்: BSc,MSc அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ:G/9092 |
| பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: 44 சூரி 1 செவ் 3 இல் உயரம்: 160 cm<br>தகைமை/தொழில்: MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: வைத்தியர் மட்டும் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12341 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>உயரம்: 5'3" கி.பா: 53 சூரி 8 செவ் 9 இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ:G/9098 |
| பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: மூலம் 1<br>கி.பா: சூரி , செவ் 10 இல் உயரம்: 175 cm<br>தகைமை/தொழில்: B.A. பட்டதாரி Alliance Finance Copic<br>எதிர்பார்ப்பு: தகுந்த அரச,தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/12343 | பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 52 சூரி 10 செவ் 7 இல் உயரம்:5'1"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் ஆங்கில அறிவு உண்டு<br>எதிர்பார்ப்பு: லண்டன் மட்டும்<br>தொ.இ:G/10366 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
[illegible]க் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# 100 டொலர்களை கடந்த கச்சா எண்ணெய் விலை

ரஷ்யா - உக்ரேயன் இடையில் போர்ப் பதற்றம் உச்சமடைந்துள்ள நிலையில் உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை வேகமாக உயர்ந்து வருகிறது.

பிரண்ட் (Brent) கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 100 டொலர்களை தாண்டியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது 2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு பதிவான அதிகபட்ச விலையாகும்.

கிழக்கு உக்ரேயினில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அறிவித்ததும் ஒரு காரணமாக இருக்கலாம் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உக்ரேயன் மீதான போருக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாமிர் புடின் நேற்று அதிகாலை உத்தரவிட்டுள்ளமை குறிப்படத்தக்கது. (நி)

# உக்ரேய்னில் இரு நகரங்களை கைப்பற்றியது ரஷ்யா!

(மொஸ்கோ)

உக்ரேய்னில் உள்ள லுஹான்ஸ்கில் 2 நகரங்களை ரஷ்யா ஆதரவு பிரிவினைவாதிகள் கைப்பற்றி உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

ரஷ்யா-உக்ரேயன்இடையே நேற்று கடும் போர் மூண்டது. போர் நடந்து கொண்டு இருக்கும் நிலையில் உக்ரேய்னில் உள்ள ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் நகரங்களை கைப்பற்றும் நடவடிக்கைகளை தொடங்கினார்கள்.

லுஹான்ஸ்கில் 2 நகரங்களை ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் கைப்பற்றி உள்ளனர். இதை அவர்களே தெரிவித்துள்ளனர். (நி)

## இந்தியர்களை மீட்பதற்காக சென்ற விமானம் உக்ரேய்னில் இருந்து திருப்பிவிடப்பட்டது

(கீவ்)

உக்ரேய்னில் உள்ள இந்தியர்களை மீட்பதற்காக பயணித்த ஏர் இந்தியா விமானம் திருப்பிவிடப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

தலைநகர் டில்லியில் இருந்து. உக்ரேயன் தலைநகர் கீவ் நகருக்கு சென்ற இந்திய விமானமே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

கீவ் நகரை நெருங்கிய வேளையில் ஏர் இந்தியா விமானத்திற்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும், NOTAM எனப்படும் வான் தாக்குதல் எச்சரிக்கையை குறிப்பிட்டு ஏர் இந்தியா விமானம் திருப்பி அனுப்பப்பட்டதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

## வான்வெளியை மூடியது உக்ரேய்ன்

(கீவ்)

ரஷ்யா போர் தொடுத்துள்ளதால் வர்த்தகம் மற்றும் பயணிகள் விமான சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக உக்ரேயன் அறிவித்துள்ளது.

உக்ரேய்னில் பயணிகள் விமானம் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

உக்ரேயன் தனது வான்வெளியை மூடியதால் எந்த நாட்டின் பயணிகள் விமானமும் உக்ரேய்னில் பறக்க முடியாது.

வர்த்தகம் மற்றும் பயணிகள் விமான சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக உக்ரேயன் அறிவித்துள்ளது. (நி)

# குண்டு மழை பொழியும் ரஷ்யா சமாளிக்க முடியாமல் திணறும் உக்ரேய்ன்

(மொஸ்கோ)

உகரேயன் நாட்டின் விமானத் தளங்கள், வான் வெளி பாதுகாப்பு கட்டமைப்புகளை அழித்து விட்டதாக ரஷ்யா தகவல் தெரிவித்துள்ளது.

ஐ.நா. மற்றும் உலக நாடுகளின் கோரிக்கையை புறந்தள்ளிய ரஷ்யா, கடந்த பல மணி நேரமாக உக்ரேய்னில் முழு அளவிலான தாக்குதலை நடத்தி வருகிறது.

உக்ரேயன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைக்கு உரிய பதிலடி தரப்படும் என பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

விமான நிலையங்கள் மற்றும் இராணுவ நிலைகளை குறிவைத்து ரஷ்யா தாக்கும் நிலையில் அதற்கு தங்கள் தரப்பில் பதிலடி கொடுக்கப்பட்டு வருவதாக உக்ரேயன் தெரிவித்துள்ளது.

கொத்துக்குண்டுகள் உள்ளிட்ட ஆயுதங்களால் ரஷ்யா மேற்கொள்ளும் தாக்குதலை சமாளிக்க முடியாமல் உக்ரேயன் படைகள் திணறி வருகின்றன.

ரஷ்ய படைகள் உக்ரேயினின் முக்கிய நகரங்கள்



மற்றும் இராணுவத் தளங்களை குறிவைத்து குண்டு மழை பொழிந்து வருகின்றன.

ரஷ்யாவின் தாக்குதலில் இருந்து தப்பிக்க உக்ரேய்னில் மெட்ரோ ரயில் சுரங்கப் பாதைகளில் மக்கள் தஞ்சமடைந்துள்ளனர். (நி)

# உலகள

## ரஷ்யா- உ

# புடி

(மொஸ்கோ)

உக்ரேய்னில் ஒரு
ஜனாதிபதி விளாடிமி
இடையே போர் மூண்



## ரஷ்யாவின் சுட்டு வீழ்த்

(கீவ்)

உக்ரேயன் மீது ரஷ்ய இராணுவம் போர்த்தொடுத்துள்ள நிலையில், பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள உக்ரேயன் ஐந்து விமானங்களை சுட்டு வீழ்த்தியுள்ளது.

உக்ரேயன் மீது ரஷ்யாவின் போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்து வருகின்றன.

ரஷ்யா தாக்குதலில் இருந்து உக்ரேயன் தங்களை தற்காத்துக் கொள்ள பதிலடி கொடுத்து வருகிறது.

அந்த வகையில் ரஷ்யாவின் ஐந்து போர் விமானங்கள் மற்றும்

## எங்களை காப்பாற்றுங்கள்

உக்ரேயன் ஜனாதிபதி வேண்டுகோள்

(கீவ்)

ரஷ்யா தொடுத்துள்ள போரை தடுத்து நிறுத்த உலக நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று உக்ரேயன் பிரதமர் ஜெலன்ஸ்கி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உக்ரேயன் இராணுவம் தனது பணிகளை செய்து வருவதால் நாட்டு மக்கள் யாரும் பதற்றம் அடைய வேண்டாம். மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடு

# ளாவிய வேண்டுகோளை மீறி
# உக்ரேயன் இடையே மூண்டது போர்!

## டின் அதிரடி

**ரு இராணுவ நடவடிக்கையை தொடங்குவதாக, ரஷ்ய டிமிர் புடின் அறிவித்த சில நிமிடங்களில் உக்ரேயன்-ரஷ்யா ண்டது.**





மொஸ்கோவில் நேற்று வியாழக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெற்ற ஊடக சந்திப்பில், 'நான் ஒரு இரா ணுவ நடவடிக்கைக்கு முடிவு எடுத்துள்ளேன்.' என்று புடின் கூறி இந்த உலகையே ஆச்ச ரியத்துக்கு உள்ளாக்கி னார்.

அத்துடன், இந்த நடவடிக் கைகளில் தலையிடும் எவரு க்கும் பதிலடி கொடுப்பதாக வும் புடின் தெரிவித்தார். அத் துடன் உக்ரேயன் இராணுவ த்தை ஆயுதங்களைக் கீழே போடுமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

மேற்கத்திய சீற்றம் மற்றும் போரைத் தொடங்க வேண டாம் என்ற உலகளாவிய வேண்டுகோளை மீறி புடினின் இந்த அறிவிப்பு வெளியாகி யுள்ளது.

இதற்கு பதிலளிக்கும் வித மாக, உக்ரேயனின் ஜனா திபதி வோலோடிமிர் ஜெலெ ன்ஸ்கி, ஐரோப்பாவில் ஒரு பெரிய போருக்கு ஆதரவளிக்க வேண்டாம் என்று ரஷ்ய ர்களுக்கு உணர்ச்சிபூர் வமான வேண்டுகோள் விடு த்தார்.

இந்த அறிவிப்புக்கு பின் னர், இந்த அறிவிப்பை கண டித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன், 'ஜனாதிபதி புடின் ஒரு திட்டமிடப்பட்ட போரைத் தேர்ந்தெடுத்துள்ளார், அது பேரழிவுகரமான உயிர் இழ ப்பு மற்றும் மனித துன்பங்க ளைக் கொண்டு வரும்' என தெரிவித்தார். (நி)

## ன் 5 விமானங்களை த்தியது உக்ரேயன்



ஒரு ஹெலிகொப்டரை சுட்டு வீழ்த் தியதாக உக்ரேயன் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனால் ரஷ்யா தாக்கு தலை அதிகப்படுத்தும் என அஞ்சப்படுகிறது. (நி)

## படைகளை திரும்பப் பெறுங்கள்
### ஐ.நா. வேண்டுகோள்


(ஜெனிவா)

உக்ரேயன் மீது ரஷ்ய படைகள் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், ஐ.நா.பாதுகாப்பு சபை அவசரமாக கூடிய நிலையில், படைகளை திரும்பப் பெறுங்கள் என புடினுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத்தார்.

ஐ.நா.பாதுகாப்பு சபை பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரேஸ் கூறுகையில், "ரஷ்ய ஜனாதிபதி புடின், மனிதநேயத்தின் அடிப்ப டையில் படைகளை ரஷ்யா வுக்கு திரும்பப்பெற வேண்டும். அமைதியான முறையில் தீர்வு காண வேண்டும்.

ஐரோப்பிய கண்டத்தில் மிக வும் மோசமான போருக்கு அனுமதிக்கக் கூடாது. இந்த மோதலை நிறுத்த வேண்டும்" என புடினுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி)

## அரசியல்வாதிகள் மனச்சாட்சியை ஆய்வு செய்ய வேண்டும்
### உக்ரேயன் போர்ப் பதற்றம் தொடர்பில் போப் கவலை



(வத்திக்கான்)

"அரசியல்வாதிகள் தங் கள் மனச்சாட்சியை ஆய்வு செய்ய வேண்டும்" என உக் ரேயன் பதற்றம் தொடர்பில் பாப்பரசர் பிரான்சிஸ் கருத்து தெரிவித்துள்ளார்.

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடான உக்ரேயன் 'நேட்டோ' அமைப்பில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து ரஷ்யா, உக்ரேயன் நாட்டின் எல்லையில் சுமார் ஒன்றரை இலட்சம் படை வீரர்களை குவித்துள்ளது.

இதனால் ரஷ்யா எந்த நேரத்திலும் உக்ரேயனுக் குள் ஊடுருவி அந்த நாட்டை ஆக்கிரமிக்கலாம் என அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் தொடர்ந்து எச்சரி த்து வருகின்றன.

ரஷ்யாவின் தொடர் நடவ டிக்கைகளும் தொடர்ந்து போர்ப் பதற்றத்தை அதிகரி த்து.

இந்த நிலையில் ரோம் நக ரில் உள்ள வத்திக்கான் தேவாலயத்தில் நேற்று நடந்த பொதுப் பார்வையாளர்கள் கூட்டத்தில் சோகம் நிறைந்த குரலில் பேசிய போப்பிரா ன்சிஸ், உக்ரேயனில் நிலவி வரும் போர்ச் சூழல் தனது இதயத்தில் மிகுந்த வேத னையை ஏற்படுத்தி உள்ள தாகவும் சர்வதேச சட்டத்தை இழிவுபடுத்தும் செயலை கண்டிப்பதாகவும் தெரிவித் தார்.

மேலும் அரசியல்வாதி கள் தங்கள் செயல்களின் விளைவுகள் பற்றி, கடவுளு க்கு முன்பாக தங்கள் மனச் சாட்சியை ஆய்வு செய்ய வேண்டும் என்று கூறிய அவர்,

எதிர்வரும் மார்ச் 2 ஆம் திகதி சாம்பல் புதன்கிழ மையை அமைதிக்கான உண் ணாவிரதம் மற்றும் பிரார்த்த னைக்கான சர்வதேச தின மாக கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொண்டார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தல் தாமதமாவதற்கு எதிராக சட்ட நடவடிக்கை

## ஆராய்கிறது பவ்ரல் அமைப்பு

(கொழும்பு)

**மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்ந்தும் ஒத்திவைக்கப்படுவதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான சாத்தியக்கூறுகளை தேர்தல் கண்காணிப்பு அமைப்பான சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (பவ்ரல்) ஆய்வு செய்து வருகிறது.**

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் முன்னைய நிர்வாகமோ தற்போதைய அரசாங்கமோ அதிக கவனம் செலுத்தவில்லை.

எனவே, மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

சுமார் நான்கு ஆண்டுகளாக தேர்தல் தாமதமாகி வருவதால், மாகாணசபை செயற்பாடுகள் அந்தந்த ஆளுநர்கள் மூலமாகவே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய அரசாங்கம் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசியல் அறிக்கைகளை வெளியிட்டாலும், தேர்தலை நடத்துவதற்கு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆகவே தாமதமான மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான அர்த்தமுள்ள முயற்சிகள் எவையும் அவதானிக்கப்படாததால், சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

# மின் கட்டணத்தை அதிகரிப்பது அவசியம்

## இலங்கை மின்சாரசபை தெரிவிப்பு

(கொழும்பு)

மின்சார கட்டணத்தை அதிகரிப்பதற்கான அவசியப்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கை மின்சார-சபையின் மேலதிக நிதி முகாமையாளர் நிஹால் பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

நுகர்வோரிடம் இருந்து இதுவரை செலுத்தப்படாதுள்ள மின் பட்டியலின் மொத்த பெறுமதி 42 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபையின் மேலதிக நிதி முகாமையாளர் நிஹால் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதனால் மின் கட்டணங்களைச் செலுத்தாதவர்களுக்கு சிவப்பு பட்டியலை விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# இ.போ.ச. நிரப்பு நிலையங்களில் இருந்து தனியார் பேருந்துகளுக்கு எரிபொருள்

## போக்குவரத்து சேவைகள் அமைச்சு

(கொழும்பு)

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில் இலங்கை போக்குவரத்து சபையின் நிரப்பு நிலையங்களில் இருந்து தனியார் பேருந்துகளுக்கு எரிபொருள் விநியோகம் செய்வதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாக போக்குவரத்து சேவைகள் அமைச்சு நேற்று வியாழக்கிழமை தெரிவித்துள்ளது.

நிதியமைச்சருடனான சந்திப்பின்போது இந்த விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டார்.

மேலும் தற்போது இலங்கை போக்குவரத்து சபை மற்றும் ரயில்வே திணைக்களம் என்பனவற்றிற்கு இரண்டு நாட்களுக்கு தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக அவர் ஊடகமொன்றுக்கு தெரிவித்தார். (நி)

# பழைய வாக்காளர் பட்டியலால் புதியவர்கள் வாக்குரிமை இழக்க நேரிடும்

## மனோ சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கடந்த வருடத்திற்கான வாக்காளர் பட்டியலை அவ்வாறே தொடருவதால், புதிய வாக்காளர்களுக்கான வாக்குரிமை இல்லாது போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக் குழுவுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போது இந்த விடயத்தை சுட்டிக்காட்டியதாக அவர் குறிப்பிட்டார். (நி)



# செய்தித்துளிகள்

## சாரதியின் கவனயீனத்தால் பறிபோன பிஞ்சு உயிர்

(கொழும்பு)

கட்டானையில் இடம்பெற்ற விபத்தில் முச்சக்கரவண்டியின் பின்னால் அமர்ந்து பயணித்த 11 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கதிரான சந்தியில் இருந்து கோபுர சந்தியை நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி திடீரென U வடிவில் திரும்ப முற்பட்ட போது கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த சிறுவன் திம்பிரிகஸ்கடுவ பகுதியைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். முச்சக்கரவண்டி சாரதியின் கவனயீனம் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி)

## சுமார் 9 லட்சம் பேர் இதுவரை தடுப்பூசி பெறவில்லை

(கொழும்பு)

நாட்டில் 9 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கொரோனா தடுப்பூசியின் ஒரு டோஸைக்கூட பெறவில்லை என சுகாதார அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயம் குறித்து ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ள தொற்று நோய் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சமித்த கினிகே மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி)

## மான் வைத்திருந்தவர் கைது

(மட்டக்களப்பு)


மட்டு கரடியானாறு பொலிஸ் பிரிவிலுள்ள பங்குடாவெளி பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் அனுமதியின்றி 5 வயது மான் ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் நேற்று முன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டார். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 180 | 170 | 160 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 | 500 |
| தக்காளி | 250 | 240 | 200 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 90 | 80 | 60 |
| கோவா | 80 | 150 | 140 | 240 |
| கரட் | 300 | 450 | 400 | 450 |
| பூசணி | 120 | 150 | 140 | 200 |
| புடோல் | 200 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 100-300 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 160 | 150 |
| பாகற்காய் | 250 | 250 | 250 | 300 |
| வெண்டிக்காய் | 180 | 220 | 170 | 250 |
| கருணைக் கிழங்கு | 80 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 180 | 200 | 200 | 240 |
| லீக்ஸ் | 130 | 120 | 140 | 150 |
| பீற்றூட் | 100 | 200 | 180 | 200 |
| கறிமிளகாய் | 400 | 500 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 1000 | 1200 | 1000 | 1200 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 250 |
| கத்தரிதம்புள்ள | 160 | 150 | -- | 130 |
| கீரை - 1 பிடி | 80 | 120 | 60 | 100 |
| தேசிக்காய் | 80 | 150 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-80 | 70-90 |
| இராசவள்ளி | 180 | 200 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 120 | 100 | 140 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | -- | 110 | 80 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அரியவகை கடலாமைகள் மீட்பு



(மன்னார்)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுத்தூர் பகுதியில் சட்ட விரோதமாக பிடிக்கப்பட்டு குளியல் அறையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த ஐந்து கடலாமைகள் நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது

மன்னார் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் எழுத்தூர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே மேற்படி ஆமைகள் மீட்கப்பட்டன.

குறித்த ஆமைகள் அரிய வகை பேராமை இனத்தை சேர்ந்தவை என்பதுடன் ஒவ்வொரு ஆமையும் சுமார் 100 கிலோ எடை உடையவையாக காணப்படுகின்றது

குறித்த கடலாமைகள் பொலிஸாரின் மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு கடலில் மீள் விடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

(4-6-285)

## முல்லையில் அபிவிருத்திகள் மந்தம் சட்டவிரோத தொழில்கள் தாராளம்

### பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(கண்டாவளை)

**முல்லைத்தீவு புத்துவெட்டுவான் முதிரைச்சோலைப் பகுதியில் பெருமளவான காடுகள் அழிக்கப்பட்டு கிரவல் மண் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்ற போதும் தமது பகுதிகளில் எந்தவித அபிவிருத்திகளும் இல்லை என இதனைச் சூழவுள்ள கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.**

முல்லைத்தீவு புத்து வெட்டுவான், மருதன்குளம், ஐயன்கன்குளம் போன்ற கிராமங்களை அண்மித்துக் காணப்படுகின்ற புத்து வெட்டுவான் முதிரைச்சோலை பகுதியில் பெருமளவான காடுகள் அழிக்கப்பட்டு கிரவல் மண் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு கிரவல் அகழ்வுகள் தொடர்ந்தும் இடம்றெுவதாகவும் இந்த பிரதேசத்தில் 25 தொடக்கம் 30 அடி ஆழத்திற்கு மேல் இவ்வாறு கிரவல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதனால் பாரிய குழிகள் ஏற்பட்டு நீர்தேங்கிக்காணப்படுகின்றன.

இவ்வாறு பாரிய குழிகள் காணப்படுவதனால் எதிர்காலத்தில் கால்நடைகள் வீழ்ந்து இறக்ககூடிய ஆபத்து நிலை காணப்படுவதாகவும் சுட்டிக் காட்டியுள்ள பிரதேச மக்கள் தினமும் தமதுபகுதியில் இருந்து பெருமளவான கிரவல் மண் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்ற போதும் தமது கிராமத்திற்கான பிரதான போக்குவரத்து வீதி கூட இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் பத்து வருடங்களாக தமது போக்குவரத்துக்களில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

(315)

## தொழில் தேடுநர்- வழங்குநர்களை டிஜிற்றல் மயப்படுத்த தீர்மானம்

(அராலி)

வடமாகாணத்தில் தொழில் தேடுபவர்கள் மற்றும் தொழில் வழங்க காத்திருப்போர் தொடர்பிலான தகவல்களை டிஜிற்றல் தளம் ஒன்றில் பதிவு செய்யுமாறு வடமாகாண ஆளுநர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள வடமாகாண ஆளுநர் உப அலுவலகத்தில் வவுனியா மாவட்ட தொழில் திணைக்களம் மற்றும் மனிதவலு வேலை வாய்ப்பு உத்தியோகத்தர்களுக்கும் இடையிலான மாவட்ட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது வட மாகாணத்தில் நிலவும் வேலையில்லா பிரச்சினையை எதிர்கொள்வதற்கு தொழில் வழங்குநர்களை இணைத்துக் கொள்வது தொடர்பில் அதிகாரிகளுக்கும் ஆளுநருக்கும் இடையில் கருத்து பரிமாற்றங்கள் இடம் பெற்றது.

இதன்போது வடமாகாண ஆளுநர் அதிகாரிகளுக்கு பின்வரும் ஆலோசனைகளை முன்வைத்தார். அந்த வகையில் வடக்கில் தொழில் வாய்ப்புகளை தேடி காத்திருக்கும் இளைஞர் யுவதிகளின் விபரங்களை டிஜிற்றல் மயப்படுத்துவதோடு தொழில் வழங்குநர்களையும் இணைத்து தரவு தளம் ஒன்றை உருவாக்குங்கள்

இவ்வாறான நடைமுறைகளை மாவட்ட ரீதியாக கடமையில் உள்ள உத்தியோகத்தர்கள் நடைமுறைபடுத்த வேண்டும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 பாடசாலைகள் வீதம் தெரிவுசெய்யப்பட்டு தேசிய கைத் தொழில் பயிலுநர் அதிகார சபையினால் முன்னெடுக்கப்படுகின்ற பயிற்சி நெறிகளை குறித்த பாடசாலைகளில் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்துங்கள்.

வெளிநாடுகளில் வேலை வாய்ப்பை தேடிச்செல்லும் இளைஞர்களுக்கு உள்நாட்டிலேயே அவர்களின் துறை சார்ந்த துறைகளில் பயிற்சிகளை வழங்கி அவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு பல் வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆளுநர் கலந்துரையாடினார்.

(4-6-104)

## தவறவிடப்பட்ட பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்த இராணுவம்



(அராலி)

வல்வெட்டித்துறை வீதியில் கண்டெடுக்கப்பட்ட பணப்பையை உரியவரிடம் நேற்று இராணுவத்தினர் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது வல்வெட்டித்துறைப் பகுதியில் வீதியில் பணப்பை ஒன்று தவறவிடப்பட்ட நிலையில் அதனை இராணுவத்தினர் மீட்டனர்.

அதில் 20 ஆயிரம் ரூபா பணம், இரண்டு வங்கி அட்டைகள், தேசிய அடையாள அட்டை என்பன காணப்பட்டதுடன் சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இன் நிலையில் உரியவர் அடையாளம் காணப்பட்டு அதைத்தொடர்ந்து பொலிஸார் முன்னிலையில் குறித்த பணப்பை ஒப்படைக்கப்பட்டது.

(4-6-104)

## தொல்பொருட்கள் கடத்திய 10 பேருக்கும் விளக்கமறியல்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தண்டுவான் பகுதியில் புராதன தொல்பொருளான தூண்கள் இரண்டினை சிலர் கடத்தி செல்வதாக பொது மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டில் மேற்கொள் ளப்பட்ட நடவடிக்கையின் போது கட்சி ஒன்றின் பிரதிநிதி உட்பட 10 பேர் அண்மையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் அவர்களிடம் மேற்கொண்ட விசாரணகளின் பின் னர் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது சந்தேக நபர்கள் அனை வரையும் எதிர்வரும் மார்ச் எட்டாம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(4-6-299)

## மனித புதைகுழி அகழ்வில் உறவுகளையும் அனுமதிக்க வேண்டும்

### மன். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(மன்னார்)

மன்னார் மனிதப் புதைகுழி மீண்டும் அகழ்வு செய்யும் போது காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகள் அதனை நேரடியாக பார்வையிட்டு உண்மைகளை கண்டறிய அனுமதிக்க வேண்டும் என மன்னாரில் காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க [illegible] மன்னாரில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,மன்னார் மாவட்டத்தில் கடந்த சில வருடங்களுக்கு முன் மன்னார் நுழைவாயிலில் சதொச கட்டடம் இருந்த இடத்தில் கட்டடம் கட்டுவதற்காக தோண்டப்பட்ட இடத்தில் மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டன.

குறித்த பகுதியில் மீட்கப்பட்ட மனித எலும்புக் கூடுகள் எமது உறவுகள் உடையதாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தோம்.


எனவே இந்த மனித எச்சங்கள் யாருடையது? என்பதை தெரியப்படுத்த வேண்டும். அத்தோடு அகழ்வு பணியின் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் அங்கு சென்று அதனை நேரடியாக பார்வையிட்டு கண்டறிவதற்கான சுதந்திரத்தை எங்களுக்குத் தர வேண்டும் என தெரிவித்தார்.

(4-6-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## வாசனையைத் திருடியவள்



பக்கத்து வீட்டுக்காரி சமைக்கும் சூப்பின் வாசனை அந்த ஏழைப் பெண்ணுக்குப் போதுமானதாக இருந்தது.

தினமும் பக்கத்து வீட்டிலிருந்து சூப் வாசனை வரத் தொடங்கியதும் தன் கூழ் கிண்ணத்துடன் அந்த வீட்டின் ஜன்னல் ஓரமாகப் போய் உட்கார்ந்து கொள்வாள். கமழும் சூப் வாசனையை மூக்கால் உள்ளிழுத்து கூழ் குடித்தாள்.

நாள்தோறும் அந்த ஏழைப் பெண் தன் வீட்டு சூப் வாசனையை முகர்வது பிடிக்காமல் அவளைப் பார்த்து சீறுவாள்.

ஆனால் அவள் அதைக் கண்டு கொள்ளாமல் சாப்பிட்டுக்கொண்டிருப்பாள். சூப் சமைப்பவள் தன் சூப் வாசனையை ஏழைப் பெண் திருடிக் கொண்டிருப்பதாக ஊர்த்தலைவரிடம் போய் புகார் செய்தாள். ஊர்த்தலைவர் முன் ஏழைப் பெண்ணை கொண்டு போய் நிறுத்தி, "இவள் அவளுடைய கூழைக் குடிப்பதற்காக என்னுடைய சூப் வாசனையை தினமும் திருடுகிறாள். இவளுக்கு நீங்கள் சரியான தண்டனை கொடுக்க வேண்டும்" என்றாள்.

ஊர்த்தலைவர் அவளது புகாரை ஏற்றுக் கொண்டார். "உன் சூப் வாசனையைத் திருடிய இவளை தண்டிக்க வேண்டியது சரிதான். நீயே! தண்டனையை நிறை வேற்றலாம்" என்று சொன்னார்."

"உன் சூப்பின் வாசனையைத்தானே அவன் திருடினாள். அதற்காக நீ அவளுடைய நிழலை தண்டித்து விடலாம். அவளுடைய நிழலை நாற்பது முறை அடித்துக் கொள்ளலாம்" என்று கூறினார். அடிப்பதற்காக பெரிய கம்பு ஒன்றையும் புகார் கொடுத்தவளின் கையில் கொடுத்தார்.

அந்தக் கம்பை வைத்து ஏழைப் பெண்ணின் நிழலை அடிக்கத் தொடங்கினாள். அவளது செயலை ஊர் மக்கள் எல்லோரும் பார்த்து சிரித்தார்கள். மற்றவர்களுடைய கேலிக்கு ஆளானது அவளுக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

தன் தவறை உணர்ந்து ஏழைப் பெண்ணிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாள். அந்த நாளிலிருந்து தான் சமைக்கும் சூப்பை அந்த ஏழைப் பெண்ணுக்கும் கொடுத்தாள்.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்



24

### திருமணம்

"குலமும் நலமும் பேரழகும் ஆற்றலும் மிக்க இராமன், சீதையை மணக்கத் தக்கவன்" என்று சனகன் முடிவு செய்தான். எனினும், அவளை மணக்க அவனே வைத்த தேர்வு அவனுக்குக் குறுக்கே நின்றது; மூலையில் மலை போல் வில் ஒன்று கிடப்பது நினைவுக்கு வந்தது.

அது ஒரு தடைக் கல் ஆக இருக்குமோ? என்று கவலையுற்றான்; அவனே சீதையைச் சுற்றி ஒரு முள்வேலியை அமைத்து விட்டான். அதனை அவனே எப்படி அகற்ற முடியும்?

"வில்லை வளைத்தே இராமன் அவளை மணக்க வேண்டும்" என்று முடிவு செய்தான். அதற்கு முன்னர் சீதையின் பிறப்பு. அவள் வளர்ப்பு இவற்றைப் பற்றி அறிவிக்க விரும்பினான். அந்த வில்லின் வரலாற்றையும் தெரிவிக்க விரும்பினான். அவன் குறிப்பறிந்து செயற்படும் அவைக் களத்தில் இருந்த முனிவர் சதானந்தர். சீதை சனகனுக்குக் கிடைத்த ஆதி நிகழ்ச்சியையும், வில்லை முறிக்க வேண்டிய தேவையையும் உரைத்தார்.

சீதை சனகன் வளர்ப்பு மகள்; அவன் மன்னனாக இருந்தும் உழவர்களைப் போலத் தானே சென்று நிலத்தை உழுது வந்தான். "அவன் கலப்பையின் கொழு முனையில் தட்டுப்பட்ட செல்வக் கொழுந்து சீதை" என்பதைத் தெரிவித்தார்.

அவள் மண்மகள் தந்த அரிய செல்வம்; அவளைச் சனகன், 'தன் மகள்' என்றே வளர்த்து வந்தான். அவள் பேரழகைக் கண்டு அரசர் போர் எழுப்பித் தங்களுக்குள் மோதிக் கொண்டனர். அவனாக விரும்பி, அவளை யாருக்கும் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

அமைச்சர்களுடன் கலந்து, அடுத்துச் செய்வது யாது? என்று ஆலோசித்தான்; தன்னிடம் ஒரு காலத்தில் ஒப்படைக்கப்பட்ட சிவதனுசு ஒன்று, எடுப்பார் அற்று முடங்கிக் கிடந்தது. "அந்த வில்லை எடுத்து, அதனை வளைத்து, நாண் ஏற்றி, அம்பு செலுத்தக்கூடிய ஆடவனே அவளை மணக்கத் தக்கவன்" என்று அறிவித்தான்.

கனியைப் பறிக்கக் கல் தேவைப்பட்டது. கல்லை எடுத்தால் தான் அதைக் கொண்டு கனியை வீழ்த்த முடியும். அதே நிலைமை தான் இங்கு உருவாயிற்று.

"வில்லை வளைத்தால்தான் அவளை அடைய முடியும்" என்ற நிலை ஏற்பட்டு விட்டது. தேசத்து அரசர்கள் பலர் சீதைபால் நேசம் கொண்டு வில்லைத் தூக்கிப் பார்த்தார்கள்: அது தந்த தொல்லையைக் கண்டு தோல்வியைத் தாங்கியவராய் அவ்வேல் விழியாளை மறந்தனர்.

இம்முயற்சியைத் துறந்தனர். சீதையைத் தொடுவதற்கு முன் இந்த வில்லின் நாணைத் தொட நேர்ந்தது. அதனால், பல்லை இழந்தவர் பலர். அந்த முல்லைக் கொடியாளை அடைய முடியாமல் துயருற்றுத் திரும்பியவர் பலர்; சீதையின் கன்னிமைக்கு அந்த வில்லின் வல்லமை காப்பாக இருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆண்டவனே! உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் இன்புற அருள் புரிவீர்" என்று வேண்டு. அப்படியின்றி "என்னைக் காப்பாற்று" என்று கேளாதே. – ஞானிகள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ரஷ்ய - உக்ரைன் போர் உலகப் போருக்கான கால்கோளா?

தனது அண்டை நாடான உக்ரைன் மீது ரஷ்யப் படைகள் நேற்றைய தினம் தாக்குதலைத் தொடுத்துள்ளன.

கடந்த சில நாட்களாக ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையில் போர்ப் பதற்றம் நிலவி இருந்தது.

போரைத் தவிர்க்குமாறு ரஷ்யாவிடம் உலக நாடுகள் கோரிக்கை விடுத்திருந்தன.

அதற்கும் மேலாக, ஐக்கிய நாடுகள் சபையும் போர் ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ளுமாறு ரஷ்யாவிடம் கேட்டிருந்தது.

ரஷ்ய – உக்ரைன் போர் மூளுமா? அவ்வாறு போர் மூண்டால் அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பன பற்றியெல்லாம் சர்வதேச அரசியல் விமர்சகர்கள் பல கோணங்களிலும் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

இதற்கும் மேலாக, ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதிப்பதாக உலக நாடுகள் அறிவித்திருந்தன.

இந்நிலையில், உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தாதென்ற நம்பிக்கை இருந்தது.

எனினும் அந்த நம்பிக்கையை உடைத்தெறிவதாக நேற்று அதிகாலை வேளை உக்ரைன் மீது ரஷ்யா சரமாரியாகக் குண்டுகளைப் பொழிந்து தனது தாக்குதலை ஆரம்பித்தது.

உக்ரைன் மீது ரஷ்யா நடத்திய தாக்குதல் உலக நாடுகளை அதிர வைத்துள்ளது.

ஆம், சர்வதேச நாடுகளின் பொருளாதாரத் தடை, ஐ.நா சபையின் கோரிக்கை என்பவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் ரஷ்ய அதிபர் புடின், உக்ரைன் மீது தாக்குதலை நடத்துமாறு உத்தரவிட்டார்.

அந்த அடிப்படையில் உக்ரைன் மீதான ரஷ்யப் படைகளின் தாக்குதலால் அந்த நாட்டின் விமான நிலையங்கள் மற்றும் கடற்படைத் தளங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

ரஷ்யாவின் இந்த உக்கிரதாண்டவத்தைக் கண்டு உலக மக்கள் விறைத்துப் போயுள்ளனர்.

உலக வல்லரசுகள் சேர்ந்து ரஷ்யா மீது தாக்குதல் நடத்துவதென்ற முடிவு எடுக்கப்படுமாயின், சீனா ரஷ்யாவின் பக்கம் நின்று பதிலடி கொடுக்கும் என்பதும் தெரிந்ததே.

இந்தநிலையில்,

"ரஷ்யாவின் பாதையில் குறுக்கிடுபவர்கள் வரலாறு காணாத அளவில் மோசமான அழிவைச் சந்திப்பார்கள் "

என ரஷ்ய அதிபர் புடின் எச்சரிக்கை செய்துள்ளார்.

இங்குதான் மூன்றாம் உலகப் போருக்கான கால்கோளாக உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல் அமையலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

எதுஎவ்வாறாயினும் கொரோனாவுக்கு பின்பான பேரழிவாக ரஷ்யா ஆரம்பித்துள்ள யுத்தம் அமையலாம் என்று அனுமானிப்பதில் தவறிருப்பதாகத் தெரியவில்லை.

# வனவள பாதுகாப்பு என்ற போர்வையில் காணிகளை பெற்றுக்கொள்ள தயாரில்லை

## சபையில் அமைச்சர் ரத்நாயக்க

(கொழும்பு)

வனவள பாதுகாப்பு என்ற போர்வையில் எந்தவொரு காணியையும் பெற்றுக்கொள்ளத் தயாரில்லை என வனஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சீ.பி. ரத்நாயக்க சபையில் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, எதிரணியின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், நேற்று சபையில் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், சபையில் கருத்து தெரிவித்த அமைச்சர் சீ.பி. ரத்நாயக்க, அரசியல் நோக்கத்துக்காக, சர்வதேசத்திடம் கூறிக் கொண்டு, அதன் ஊடாக பிழைப்பு நடத்துவதாக இது மாறுமாயின், அதற்கு தாம் இடமளிக்கப்போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்று முற்பகல் எதிரணி தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மின்சார சபையின் கடனை தீர்க்க 80 பில்லியன் ரூபாய் விடுவிப்பு

## அமைச்சர் மகிந்த அமரவீர

மின் உற்பத்திக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக இலங்கை மின்சார சபை பெற்ற கடனை அடைக்க அரசாங்கம் 80 பில்லியன் ரூபாயை விடுவிக்கவுள்ளது.

அதற்கமைய, 80 பில்லியன் ரூபாய் திறைசேரியில் இருந்து விடுவிக்கப்படவுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இம்முறை எரிபொருள் விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்ட போதிலும் பொதுமக்கள் எதிர்நோக்கும் சிரமங்களை கருத்திற்கொண்டு எரிபொருளின் விலைகளை அதிகரிப்பதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையில் சமீப காலங்களில் கச்சாய் எண்ணெயின் விலை மிக உயர்ந்த புள்ளியை எட்டியுள்ள போதிலும் உள்நாட்டில் எரிபொருள் விலையை நிலையானதாக வைத்திருக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். (ம)

# புகையிரத ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க

## ஜனாதிபதியால் ஆணைக்குழு நியமனம்

புகையிரத ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு, போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.

இலங்கைப் புகையிரதத் திணைக்களத்துக்குச் சொந்தமான இரத்மலானை இயந்திரப் பொறியியல் தொழிற்சாலைக்கு நேற்று கண்காணிப்பு விஜயம் செய்த போதே, ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்தார்.

ஆட்சேர்ப்பு மற்றும் வள முகாமைத்துவம் உட்பட தற்போதுள்ள அனைத்துப் பிரச்சினைகளையும் இரண்டு மாதங்களுக்குள் தீர்க்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். (ம)

# தங்கத்தின் விலை ஒரே நாளில் 4 ஆயிரம் ரூபாவினால் அதிகரிப்பு

உக்ரைன் போர் காரணமாக இலங்கையில் தங்கத்தின் விலை ஒரே நாளில், 4 ஆயிரம் ரூபாவினால் அதிகரித்துள்ளதென அகில இலங்கை ஆபரண வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

சந்தையில், 1871 டொலரில் இருந்து 1974 டொலராக தங்கத்தின் விலை அதிகரித்துள்ளதாக அந்த சங்கத்தின் பொருளாளர் ராமன் பாலசுப்ரமணியம் தெரிவித்தார்.

24 கரட் தங்கம் பவுண் ஒன்றின் விலை ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 500 ரூபாவாகவும், 22 கரட் தங்கம் பவுண் ஒன்றின் விலை ஒரு இலட்சத்து 19 ஆயிரத்து 800 ரூபாவாகவும் அதிகரித்துள்ளதென அகில இலங்கை ஆபரண வர்த்தக சங்கத்தின் பொருளாளர் ராமன் பாலசுப்ரமணியம் தெரிவித்தார். (ம)

# நாட்டில் நேற்று மேலும் + 1,208 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியான மேலும் 1, 208 'பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 641 786ஆக அதிகரித்துள்ளது. (ம)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

# செய்தி வெள்ளம்

இந்த வாரம் நம்மிடம் ஏராளமான செய்திகள் உள்ளன.எனவே செய்தி வெள்ளத்தைத் தருகின்றோம்.

ஸ்ரீ ஸ்ரீ அவர்களின் குறியளவுப்படி பார்த்தாலும் கூட, இந்த வாரம் வழக்கத்திற்கு மாறாக நிகழ்ச்சிகள் மிகவுள்ள வாரமாக அமைந்து விட்டது.கடந்த வெள்ளிக்கிழமை, ஸ்ரீ ஸ்ரீ அவர்கள் ஒரே நாளில் மூன்று சத் சங்கங்களில் உரையாற்றினார். ஊருக்குப் புறமான இஞ்சில்லாவில் ஆயிரக்கணக்கான ஏழை மக்களிடையே நிகழ்ந்த ஊரக சத்சங்கத்தில் தொடங்கி, பெல்காமில் உற்சாகம் மிகுந்த பக்தர்களிடையே சற்று நேரம் [illegible] பக்தர்களிடம் [illegible] ஜனை ஒலி எல்லாவிடங்களிலும் எதிரொலித்தது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

பேருந்தில் பிரயாணம் செய்கின்ற ஒருவன் அதைச் செலுத்துகின்றவரை நம்பித்தானே தூங்குகின்றான்.பேருந்து செலுத்துகின்றவரும் மனிதன் தானே? அவருக்கும் தூக்கம் வரும்தானே? செலுத்துகின்ற டிரைவர் தூங்குவாரானால் தூங்கிய பிரயாணி கண் விழிப்பாரா?

எனவே , முன் பின் தெரியாத கம்பவுண்டர்களையும் டிரைவர்களையும் நம்புகின்ற நாம் அறிவுபடைத்த ஆன்றோர்களையும் நம்பித்தானே ஆக வேண்டும்?

பாலில் நெய் மறைந்திருப்பது போல் பிற இடங்களில் இறைவன் நிறைந்து மறைந்திருக்கின்றார். கடைந்த தயிரில் வெண்ணெய் திரண்டு உருண்டு வெளிப்பட்டிருப்பது போல் ஞானிகள் உள்ளத்திலும் திருக்கோயிலிலும் இறைவன் விளங்கிக் காட்சியளிக்கின்றான். (தொடரும்)



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 05

இவ் விகிதாசாரத் தேர்தல் முறை குறித்து சமூகத்தில் வெவ்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. விருப்பு வாக்கு முறை தொடர்பிலேயே மிக முக்கிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டன. இத்தேர்தல் முறைக்கூடாக பணம் படைத்தவர்கள், அதாவது அதிக பணத்தை செலவளிக்கும் வேட்பாளர் பிரதிநிதிகளாக தெரிவாகிறார்கள் என்று கூறப்பட்டது.

இறுதியில் அது பாரதூரமான அழிவுகளை நோக்கி நாட்டை தள்ளுகின்றது என்று கருதப்பட்டது. மேலும் விகிதாசாரத்தேர்தல் முறைக்கூடாக சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களும் பணத்தை செலவுசெய்து விருப்பு வாக்குகளைப் பெற்று மக்கள் பிரதிநிதிகளாக தெரிவாகிறார்கள் என்று கருதப்பட்டது.

இறுதியில் தேர்தலுக்கு செலவு செய்த பணத்தை ஈட்டிக்கொள்வதற்கு குறிப்பிட்ட மக்கள் பிரதிநிதிகள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடலாயினர். வாக்குகளுக்காக வேண்டி ஒரே கட்சியை சேர்ந்த வேட்பாளர்கள் ஒருவரை ஒருவர் கொலை செய்யும் நிலையையும் இத்தேர்தல் முறையே ஏற்படுத்தியது.

1977 வரையில் நிலவிய தேர்தல் முறையை விட விகிதாசார தேர்தல் முறையில் ஒரு சில நல்ல அடையாளங்கள் காணப்பட்டாலும் அது நாட்டிற்கு மிகவும் பொருத்தமான தேர்தல் முறையாக அமையவில்லை என்ற கருத்து மக்களிடையே வலுப்பெற்றது. இதனால் இது குறித்து சமூகத்தில் கடுமையான வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட ஆரம்பித்திருந்தது.

**விகிதாசார தேர்தல் முறையில் ஒரு சில நல்ல அடையாளங்கள் காணப்பட்டாலும், இத்தேர்தல் முறை குறித்து, தொகுதிக்கு பொறுப்பு கூறுகின்ற உறுப்பினர் இல்லாமை, சாதாரண வாக்காளர்களுக்கு தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்குத் தேவையான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு நிரந்தர பிரதிநிதியொருவர் இல்லாமை போன்ற வெவ்வேறு விமர்சனங்கள் சிவில் சமூகத்தால் முன்வைக்கப்பட்டு வந்தன.**

இதனால் புதிய தேர்தல் முறைமையொன்று தொடர்பாக பாராளுமன்றத் தெரிவு குழுவினால் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இத்தெரிவுக் குழுவின் முன்மொழிவுகளின் பயனாக கடந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட முதலில் கம்பத்தைக் கடத்தல் முறைமை (FPP) மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறைமை (PR) ஆகிய இரண்டினதும் சாதகமான அம்சங்களை ஒன்றுசேர்த்து புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறை அறிமுகம் செய்யப்பட்டது. இதன் ஆரம்பமாக உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தலில் அறிமுகம் செய்வதற்கு தேவையான சட்ட ஏற்பாடுகள் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

இவற்றை விரிவாகக் கூறுவதாயின், பழைய வட்டார/தொகுதி தேர்தல் முறை மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறை ஆகியவற்றிக்கிடையே பொதுமக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் மற்றும் குறைபாடுகளுக்கு ஒரு தீர்வாக புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதற்கான நோக்கத்தை அடைய அன்றைய அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் தலைமையின் கீழ் தேர்தல் சீர்திருத்தங்களுக்கான பாராளுமன்றக் குழு 2003 ஒகஸ்ட் 28 ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

புதிய தேர்தல் முறை சம்பந்தமாக இந்த தேர்வுக் குழுவானது அரசு, அரசு சாரா, தொழிற்கல்வி மற்றும் பிற சிவில் அமைப்புகளால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து எழுத்து மற்றும் வாய்வழி ஆலோசனைகளையும், பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் கவனத்தில் எடுத்துக்கொண்டது.

இந்த தேர்வுக் குழு, சமர்ப்பிக்கப்பட்ட அந்த விடயங்களைப் பற்றிய விரிவான ஆய்வுக்கு இணங்க, முன்னர் நிலவிய இரண்டு தேர்தல் முறைகளின் (வட்டாரம்/தொகுதி மற்றும் விகிதாசாரம்) சில பயனுள்ள அம்சங்கள் உள்வாங்கப்பட்டு, கலப்புத் தேர்தல் முறை இந்த நாட்டை இன்னும் ஜனநாயகமாக அறிமுகப்படுத்துவதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று பரிந்துரைத்தது.

2007 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தினால் வெளியிடப்பட்ட தேர்தல்கள் மறுசீரமைப்பு பற்றிய பாராளுமன்ற தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையானது நாட்டின் நிர்வாக அமைப்பின் அடிமட்டத்திலிருந்த உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் அமைப்பிலிருந்து இதைத் தொடங்க பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி, கலப்பு தேர்தல் முறையை அறிமுகப்படுத்த அந்தக் குழு பரிந்துரைத்தது.

இவ் உத்தேச சிபாரிசுகள் சற்று ஊக்கமற்ற நிலையில் காணப்பட்டதுடன் 2010 ஆம் ஆண்டளவில் மீண்டும் மேற்படி கலந்துரையாடல் போதியளவிலும் உயிரோட்டமுள்ளதாகவும் மாறியதோடு அதன் பெறுபேறாக 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்த)ச் சட்டம் உருவாக்கப்பட்டது.

## புதிய கலப்புமுறை உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டம் -2012

புதிய கலப்புமுறை உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்ட மூலம் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு கட்சிகளின் ஆதரவுடன் 10.10.2012 இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. வாக்கெடுப்பு எதுவும் இன்றி சில திருத்தங்களுடன் தேர்தல் சட்டம் நிறைவேற்றப்பட்டதோடு, இதனூடாக உள்ளூராட்சி தேர்தல்களில் விருப்பு வாக்கு முறை முற்றாக இரத்துச் செய்யப்பட்டது.

**புதிய கலப்புமுறை உள்ளூராட்சி தேர்தல் திருத்தச்சட்ட மூலம் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு கட்சிகளின் ஆதரவுடன் 10.10.2012 பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. வாக்கெடுப்பு எதுவும் இன்றி திருத்தங்களுடன் தேர்தல் சட்டம் நிறைவேற்றப்பட்டதோடு, இதனூடாக உள்ளூராட்சி தேர்தல்களில் விருப்பு வாக்கு முறை முற்றாக இரத்துச்செய்யப்பட்டது.**

இச் சட்டம் நிறைவேற்றப்படும் போது குழுநிலை விவாதத்தில் கருத்துத் தெரிவித்த அப்போதைய சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, "எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்புடன் தேர்தல் சட்டம் நிறைவேற்றப்பட்டது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம். இது ஆரம்பம் மட்டுமே, சிறந்த தேர்தல் முறையொன்றை கொண்டுவர சகல தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்.

நாட்டு நலனுக்காகவே அரசாங்கம் இந்த திருத்தத்தை மேற்கொண்டது. ஜனாதிபதியே இதனை துரிதமாக நிறைவேற்றுவதில் உறுதியாக இருந்தார். ஐ.தே.க. ஒத்துழைத்திருந்தால் பாராளுமன்ற தேர்தல் முறையையும் மாற்றியிருக்கலாம்". இவ்வாறு அப்போதைய சபை முதல்வர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கருத்துத் தெரிவித்தார்.

அப்போதைய அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறியதாவது, "புதிய தேர்தல் முறையை கொண்டுவர பங்களித்த ஜனாதிபதி, அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் அடங்கலான சகலருக்கும் நன்றி தெரிவிக்கிறேன். இது சிறுபான்மையினருக்கு நன்மையான முறையாக இருக்கும்" எனத் தெரிவித்தார். மேலும் கட்சிகளின் திருத்தங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

அப்போதைய அமைச்சர் விமல் வீரவன்ச கூறியதாவது,

"விருப்பு வாக்கு முறையினால் மக்கள் பாதிக்கப்பட்டனர். இந்த மாற்றம் மூலம் ஜனநாயகம் பலமடையும். இதற்குக் காரணமான ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறேன்" என்றார். ஜே.வி.பியின் உறுப்பினர் விஜித ஹேரத் எம்.பி. கூறுகையில்,

"இதில் குறைபாடு உள்ளது. மக்களின் அபிலாசைகள் நிறைவேறும் வகையில் இது அமைய வேண்டும்." என்றார்.

காலஞ்சென்ற முன்னாள் எம்.பி. ஏ.எச். எம். அஸ்வர் கூறியதாவது,

"தேர்தல் முறையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்த ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்கிறேன்."

இவ்வாறு பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை சமூகங்களின் வரவேற்புடனேயே புதிய கலப்பு முறை உள்ளூராட்சி மன்றத்திற்கு நடைமுறைப்படுத்த தேர்தல் திருத்தச் சட்ட மூலம் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு கட்சிகளின் ஆதரவுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

## புதிய கலப்புமுறை உள்ளூராட்சி சபைகள் தேர்தல் திருத்தச் சட்டத்தின்படி வட்டார எல்லை நிர்ணயம்

2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்த)ச் சட்டத்தின் 3அ.(1) பிரிவின்படி அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் தேசிய எல்லை நிர்ணயக் குழுவொன்று தாபிக்கப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 மணித்தியால...

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளதாக, அதன் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, இன்றைய தினம் A,B மற்றும் C ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு 4 மணித்தியாலங்களும் 40 நிமிடமும் மின்துண்டிப்பு அமுலாக்கப்படவுள்ளது.

ஏனைய வலயங்களுக்குள் உள்ளடங்கும் பகுதிகளுக்கு 5 மணித்தியாலங்களும் 15 நிமிடமும் மின்துண்டிப்பு அமுலாக்கப்பட உள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

## புகையிரதம்...

குறித்த சம்பவம் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கொக்குவில் புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையைக் கடக்க முற்பட்டபோது யாழ். காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த குளிரூட்டப்பட்ட புகையிரதம் மோதியதில் துவிச்சக்கரவண்டியில் பயணித்த குறித்த யுவதி உயிரிழந்தார்.

இச்சம்பவத்தில் பிறவுண் வீதியைச் சேர்ந்த ராஜ்குமார் ஜெயந்தி (வயது-23) என்ற இளம் பெண்ணே உயிரிழந்தவராவார்.

விபத்து தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார்.

மரணமான யுவதிக்கு அண்மையில் திருமண சம்பந்தம் பேசி வந்த நிலையில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

(ம-18,33,104,316)

## சம்பவ இடத்...

ளானதில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் மாலு சந்தி - வதிரி வீதியிலுள்ள, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரிக்கு முன்பாக இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் கோவில் சந்தையடி துன்னாலை மேற்கைச் சேர்ந்த கமலராஜா அஜந்தன் (வயது-19) என்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

மாலு சந்தியிலிருந்து வதிரி சந்தி நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் எதிரே வந்த பாரவூர்தியுடன் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மோதியதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-18,33,60,104,316)

## ஐ.நாவில்...

நடைபெறவுள்ளது.

இந்த அமர்வின்போது இலங்கை தொடர்பிலான புதுப்பிக்கப்பட்ட எழுத்து மூல சமர்ப்பணத்தை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைக்கவுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் உரையாடல் அமர்வு நடைபெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. (ம)

## தமிழ் எம்.பிகள்...

வனஜீவராசிகள் சட்ட ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தின்போதே தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம். பிக்கள் சபைக்குள் பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விவாதத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சார்ள்ஸ் நிர்மலநாதன் உரையாற்றிய பின்னரே பதாகைகளுடன் எழுந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம். பிக்கள் "பறிக்காதே பறிக்காதே. காணிகளை பறிக்காதே" "தமிழர் நிலங்களை பறிக்காதே" என கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களான சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், விநோநோகராதலிங்கம், சுமந்திரன், சாணக்கியன், கலையரசன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ம)

## போர் ஆரம்பம்...

உக்ரைன் விமானத் தளங்களின் உட்கட்டமைப்பை அழித்து விட்டதாக ரஷ்யா அறிவித்துள்ளது. அத்துடன் உக்ரைனிய கடற்படையையும் செயலிழக்க வைத்துள்ளதாகவும் கருங்கடல் மற்றும் அசோவ் கடலுக்கான அணுகல் துண்டிக்கப்பட்டதாகவும் அறிவித்துள்ளது.

உக்ரைனிய விமானத் தளங்களில் உள்ள இராணுவ உட்கட்டமைப்புகளைத் தாக்கி உக்ரைனின் வான் பாதுகாப்பை சீர்குலைத்ததாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் கூறுகிறது.

உக்ரைனில் தனது விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதாக வெளியான செய்திகளை அமைச்சகம் மறுத்துள்ளது. உக்ரைனின் கிழக்கு லுஹான்ஸ்க் பகுதியில் ஐந்து ரஷ்ய விமானங்களும் ஒரு ஹெலிகொப்டரும் சுட்டு வீழ்த்தப்பட்டதாக உக்ரைனின் இராணுவம் முன்னதாக கூறியது.

நேற்று வியாழக்கிழமை, உக்ரைனில் 'சிறப்பு இராணுவ நடவடிக்கை' ஆரம்பிக்கப்படுவதாக ரஷ்ய ஜனாதிபதி அறிவித்தார். இதைத்தொடர்ந்து உக்ரைன் முற்றுகைக்கு உட்பட்டது. பெலாரஸின் வடக்கு எல்லையில் இருந்து ரஷ்ய - பெலோருஷியன் கூட்டுத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டது. யுத்த டாங்கிகள் உக்ரைனிற்குள் நுழைந்தன. கிழக்கு மற்றும் தெற்கிலிருந்தும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. தலைநகர் கியேவ்வும் தாக்கப்படுகிறது.

இந்த தாக்குதலில் நூற்றுக்கணக்கான உக்ரேனியர்கள் கொல்லப்பட்டதாக அந்த நாட்டு உள்துறைஅமைச்சு கூறியது.

மேலும் உக்ரைனுக்கு நேட்டோ துருப்புக்களை அனுப்பும் திட்டம் இல்லை என நேட்டோ கூட்டணியின் பொதுச் செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் தெரிவித்தார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு குறித்து நேற்று செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

உக்ரைனுக்குள் நேட்டோ படைகள் தற்போது இல்லை. நேட்டோ படைகளை அனுப்பும் எந்த திட்டமும் நோக்கமும் எங்களிடம் இல்லை என்பதை நாங்கள் தெளிவுபடுத்தியுள்ளோம் என்று அவர் கூறினார். (ம)

*(இது தொடர்பான முன்னர் வந்த செய்திகள் உள்ளே)*


தன நிதானய
திகதி - 2022.02.24
சீட்டிழுப்பு இலக்கம் - 718
A 11 18 53 65
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 24.02.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2983
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
O 32 38 56 75
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/02/24
சீட்டிழுப்பு இலக்கம் 4688
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
Y 3 2 0 5 7 9
தேசிய லொத்தர் சபை

செவன
திகதி 24/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 359
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
K 06 08 77 97

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.02.24
சீட்டிழுப்பு இலக்கம் 0029
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 21 24 40 58 ரிஷபம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 24/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1036
J 19 08 11 12 78

12 வர்ண
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 32 39 60 65 73
சுப்பர் இலக்கம்
841 செம்மஞ்சள் 2022.02.24 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 216,017,563/-
011-2 333 546-47 Web: www.dlb.lk

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.02.24
சீட்டிழுப்பு இல: 3826
வர்ணம்: சிவப்பு
ரூ. 5,138,220/-
வெற்றி இலக்கங்கள்
06 47 64 66 U
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1665 நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022 / 02 / 24 தினம் வியாழன்
K 08 29 44 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூபா 60,865,516/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,812,519/-
திகதி 2022-02-24
வெற்றி வாரம் 3377
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் கன்னி
07 13 16 47
2 6 1 4 4
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 40,075,000/-

சம்பர்தன வாசனாவ
திகதி :2022-02-24
வெற்றி வாரம் : 488 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட ரூ.13,809,244/-
Z 36 42 69 3
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.2,287,960/-
ரூ.13,920,724/-

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1491
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.02.24
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,528,240/-
வெற்றி இலக்கங்கள்
07 30 46 65 N
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வெல்லப்பட்டது அதிர்ஷ்டம்
தேசிய லொத்தர் சபையினால் நடாத்தப்பட்ட சீட்டிழுப்பில் **11.02.2022** அன்று சீட்டிழுக்கப்பட்ட **மஹஜன சம்பத** ரிக்கெட்டில் ஒரு இலட்சம் வெல்லப்பட்டுள்ளது. அத்துடன் **23.02.2022** அன்று சீட்டிழுப்பில் 'ராசி சுப பலன்' (Handahana) ரிக்கெட்டில் நான்கு இலக்கங்கள் பொருந்தி ரூபா ஐந்து இலட்சம் பணப்பரிசு வெல்லப்பட்டுள்ளது.
(C-3843)
அச்சுவேலி விற்பனை முகவர்
சி.கிருசாந், அச்சுவேலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயங்கர...

பிரச்சினையின் மூலகாரணமாக காணப்படும் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக்கோரி யாழ்ப்பாணம் மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபையின் அமர்வு முதல்வர் வி .மணிவண்ணன் தலைமையில் நேற்று இடம்பெற்றது

இதன்போதே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

குறிப்பாக நாட்டில் உள்ள கொடூர சட்டமாகவும் இனரீதியாக வஞ்சிக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்ககோரி நாட்டில் இடம்பெறும் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சட்ட அமைச்சர் ஆகியோரிடம் கோரிக்கை முன்வைக்கும் வகையில் பயங்கரவாத தடைச்சட்டத்தை இந்த சபை நிறைவேற்ற வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் முன்மொழிந்தார்.

இதன்போது ஈ.பி.டீ.பி சார்பில் வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றது. அதனை தொடர்ந்து தீர்மானத்தை கூட்டமைப்பின் உறுப்பினர் வழிமொழிந்தார்.

இதன் அடிப்படையில் சர்ச்சையை தவிர்த்து தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படுவதாக சபை முதல்வர் தெரிவித்தார். (ம)

# ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை சந்தேக நபர்
## இங்கிலாந்து பொலிஸாரால் கைது

(கொழும்பு)

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலையுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் ஒருவர் இங்கிலாந்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

நிமலராஜன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டு 21 வருடங்கள் கடந்துள்ள நிலையில் 48 வயதான சந்தேக நபர் ஒருவரை பெருநகர பொலிஸ் போர்க்குற்ற விசாரணைக் குழு 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நார்தாம்ப்டன்ஷையரில் கைது செய்ததாக பிரிட்டிஷ் பெருநகர பொலிஸார் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றச் சட்டம் 2001 இன் பிரிவு 51 இன் கீழ் குற்றங்கள் புரிந்ததாக சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டதாக பெருநகர பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனால் தொடர்ந்து விசாரிக்கப்பட்டு வருகிறார். இது ஒரு முக்கியமான, சிக்கலான விசாரணையின் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும் என பெருநகர பொலிஸ் பயங்கரவாத எதிர்ப்பு கட்டளை பிரிவுக்கு தலைமை தாங்கும் தளபதி ரிச்சர்ட் ஸ்மித் தெரிவித்துள்ளார். (ம)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து நிலாவரை புத்தூர் றோட்டில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம்.
(வாகையடி சந்தி
(10366)

**074 269 0854**

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623
(10343)

## கணித, ஆங்கில வகுப்புக்கள்

- தரம் 10, O/L மாணவர்களுக்கானது.
- ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே.
- தனிப்பட்ட கவனிப்புக்கள்.
- மாணவர்களுக்குகேற்ற நேரத் தெரிவு.

! இலங்கையில் எவரும் வழங்காத சலுகை !

எம்மிடம் முழுமையாக பயின்று O/L இல் கணிதம் & ஆங்கிலம் சித்தி பெறாவிடின் செலுத்திய முழுப் பணமும் மீள வழங்கப்படும்.

உங்களின் சித்தி எங்களின் வெற்றி

பதிவுகளை 28.02.2022 இற்கு முன்னர் மேற்கொள்ளுங்கள்.

WINSTAR LEARNING CENTER
N0.45, Vembadi street, Jaffna.
077 395 0857
(10360)

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மறவன்புலவு பகுதியில் மறவன்புலவு மத்தி, அம்மன் கோயிலடியில் 4 பரப்புக் காணி புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுடன் விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

A32 பிரதான வீதியில் இருந்து 600 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

- 077 241 7589
(10365)


## உக்ரைனில் உள்ள இலங்கையர்களுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

உக்ரைனில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை கருத்தில் கொண்டு அங்காராவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் ஊடாக அங்குள்ள இலங்கையர்களை ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

இதற்கமைய,

உக்ரைனில் உள்ள இலங்கையர்கள் அங்காராவில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் தொலைபேசி இலக்கங்களான +90 534 456 94 98,+90 312 427 10 32 என்பவற்றுடனோ, slemb.ankara@mfa.gob.lk என்ற மின்அஞ்சல் முகவரி ஊடாகவோ தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

# மரண அறிவித்தல்
## கனகர் இராசையா



ஐயனார் கோவிலடி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகர் இராசையா அவர்கள் நேற்று (24.02.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகர் - சின்னக்குட்டி தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் இராஜேஸ்வரி அவர்களின் ஆருயிர்க் கணவரும் றயனி, சுரேஸ்குமார் (பிரதம பொறியியலாளர் - மாநகர சபை, யாழ்ப்பாணம்), ரவிக்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பூநகரி பிரதேச செயலகம்), சதீஸ்குமார் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - கமநல அபிவிருத்தி திணைக்களம், நல்லூர்), கவிக்குமார் (கொமர்ஷியல் வங்கி - அச்சுவேலிக் கிளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வேல்தஞ்சன் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - மாகாண காணி திணைக்களம்), விதூஸனி (பதவிநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்- யாழ். மருத்துவபீடம்), விஜயலதா, சுபானந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர்- தெல்லிப்பழை பிரதேச செயலகம்), வாசுகி (அபிவிருத்தி உத்தியோகத்தர் -பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, தென்னை பயிர்ச் செய்கை சபை- பளை) ஆகியோரின் அன்பு மாமனாரும் பொன்மகள் (மாணவி-யாழ். உயர்தொழில்நுட்பவியல் நிறுவனம்), கிருஷ்ணகிஷோர் (மாணவன் - ரஜரட்டை பல்கலைக்கழகம்), வேணுசாயினி (மாணவி-யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), கேதுஷா, கேனிஷா, யக்சலன், ரேஜிகன், டர்னிஸ், லோகலக்ஷன், ரக்சிதா, சத்யகன், சாதுஜன் ஆகியோரின் அருமைப் பேரனும் தியாகராசா, காலஞ்சென்ற நாகராசா, சின்னத்துரை, வீரசிங்கம், நன்னித்தம்பி, தவமணி, இராசமணி, நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவராசா, மகேஸ்வரி, காலஞ்சென்ற இந்திராணி, இந்திராதேவி, காலஞ்சென்ற தேவராசா, தவமலர்தேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (24.02.2022) வியாழக்கிழமை நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(10368)

077 413 6193
077 899 6136

தகவல் :- குடும்பத்தினர்


## விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

0768226240 DHL
(C-3785)

## யாழ். நகரில் வேலை வாய்ப்பு
## பிறிண்டர் திருத்துனர்

Printer - Technicians
தேவை.
பகுதி நேரம்/ முழுநேரம்
(C-3842)

077 063 3408

## வேலையாட்கள் தேவை

மேசன் வேலைக்கு ஆட்கள் தேவை. (மேசன், கூலி)
(10358)

076 136 6436
076 136 6437


# கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தில் பொருளாளராக இருந்த

அமரர்

## செல்லப்பா அரியரத்தினம்

[ ஓய்வுநிலை பிரதம லிகிதர் ]

தோற்றம் : 09.01.1928 மறைவு : 24.02.2022

அவர்கள் நேற்று ( 24.02.2022 ) வியாழக்கிழமை காலமானார். அவருடைய சேவையைப் பாராட்டுவதோடு அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய பரிபாலன சபை, தாவடி.
(10359)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.